Regd. No. M. 4593. KUDI ARASU 16 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.
தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 3-11-1945 ஐப்பசி மீ 18உ } மலர் 4

## கர்ப்ப ஆட்சியின் அவசியம்

### அதாவது
### பிள்ளைப்பேற்றை தடுத்துக் கொள்ளுதல்

‡

(தோழர் என். எப். வாதியா)

கருத்தரியாமல் இருப்பதற்காக சம்போக முறையில் நாம் மனப்பூர்வமாகச் செய்துகொள்ளும் மாற்றத்துக்கு அல்லது திருத்தத்துக்கு கர்ப்ப ஆட்சி என்று பெயர்; கருவழிப்புக்கும் கர்ப்ப ஆட்சிக்கும் மிக்க வித்தியாசமுண்டு. கர்ப்ப ஆட்சி நல்லொழுக்கத்துக்கு அடுத்த செயலா என்று கேட்கப்படுவதுண்டு. அக்கேள்விக்கு 'டீன் இன்ஞ்ச்' சரியான விடையளித்திருக்கிறார். அதாவது கர்ப்ப ஆட்சி செய்வோரின் நோக்கம் நல்லதானால் கர்ப்ப ஆட்சி நல்லதே; நோக்கம் தீயதானால் கெட்டதே. கலியாணம் செய்து கொண்ட இளம் தம்பதிகள் சம்போக சுகத்தைத் துறப்பது அசாத்தியமான காரியம்.

கர்ப்ப ஆட்சி இருவகைப்படும்.

I. முதல் வகை சுய க்ஷேமத்தைப் பொறுத்தது. ஒரு பெண் அடிக்கடி பிரசவித்தால், தேக பலத்தை விருத்தி செய்து கொள்ள, ஒவ்வொரு பிரசவத்துக்குமிடையில் போதிய காலமில்லாததினால் அவளுடைய ஆரோக்கியம் கெட்டுவிடும். சில சமயங்களில் மீண்டும் பிரசவிக்க நேர்ந்தால் மரணமும் உண்டாகும். தாய் பலவீனமாயிருந்தால் குழந்தையும் பலவீனமாகவே இருக்கும். குடும்ப வருமானம் குறைவாக இருந்தாலும் கர்ப்ப ஆட்சி அவசியமே.

II. இரண்டாவது வகை சமூக க்ஷேமம் அல்லது தேச க்ஷேமத்தைப் பொறுத்தது. சமூக க்ஷேமாபிவிர்த்தி சங்கத்தார், மனித சமூகத்தின் எதிர்கால க்ஷேமத்தை அலட்சியம் செய்துவிட்டு மக்களின் தற்காலத் துன்பங்களைப் போக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். நோய்களைத் தடுக்கும் மருந்துகளும், இதர முறைகளும் நோயாளிகளைக் காப்பாற்றி வலிமையும், ஆரோக்கியமும் உள்ள சந்ததிகள் தோன்றாமல தடுத்து வருகின்றன. ஆகவே, ஜன சமூகத்தின் குணம் சீரழிந்து வருகிறது. ஜனங்களின் தொகைப் பெருக்கம் இப்பொழுது முக்கியமாக மதிக்கப்படுகின்றதேயன்றி, ஜனங்களின் குணம் அவ்வளவாக மதிக்கப்படுவதில்லை. வாழ்க்கைமுறை மோசமாகி வேலையில்லாத் திண்டாட்டமும் போரும் உண்டாகின்றன.

ஆகவே, பொதுவாகப் பார்த்தால், சமூக க்ஷேமாபிவிர்த்தி சங்கங்களின் நோக்கம் கீழ்வரும்மாதிரி இருக்க வேண்டும்.

1. தகுதியற்றவர்கள் பெருகாமல் தடுத்தல். இதற்காக,

(a) ஆண்களையும் பெண்களையும் பிரித்து வைத்தல்.

(b) சுயமாகவோ, பலாத்காரமாகவோ மலடாக்குதல்.

(c) குடும்பத்தைக் கட்டுப்படுத்தல்.

2. தகுதியுடையவர்கள் பெருக உதவி புரிதல். இதற்காகச் சில பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அவசியம்.

#### கர்ப்ப ஆட்சி அவசியம் என்பதற்குச் சில காரணங்கள்

1. பிரசவத்தினால பல நோய்கள் விருத்தியாவதை கர்ப்ப ஆட்சி தடுக்கிறது.

2. சித்தப் பிரமை, பலவீனம், பரம்பரை நோய்கள் முதலியன பிற்கால சந்ததிகளுக்குப் பரவாமல் தடுக்கிறது.

3. பெண்களின் ஆரோக்கியத்தைக் காப்பாற்றுகிறது. அடிக்கடி பிரசவிப்பதினால் பெண்களின் ஆயுள் குறைகிறது. கர்ப்ப ஆட்சி தாய் மரணத்தையும், சிசு மரணத்தையும் குறைக்கிறது. பிரசவம் அதிகமாக இருந்தால் தாய் மரணமும், சிசு மரணமும் அதிகமாகத்தான் இருக்கும்.

4. வறுமையுள்ள குடும்பங்களில் அதிகப் பேர் இல்லாமலிருப்பது தான் நல்லது. ஆகவே குடும்ப க்ஷேமத்தை முன்னிட்டும், பொருளாதார நிலையை முன்னிட்டும் ஏழைஎளியோருக்கு கர்ப்ப ஆட்சி முறையைப் பற்றி அறிந்து கொள்ள இப்பொழுது வசதியில்லை. படிப்புடையவர்களுக்கு மட்டுமே வசதியிருந்து வருகிறது. அதனாலேயே கருவழிப்பு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

எல்லோரும் கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்ற கட்டுப்பாடு இருந்து வருவதினாலும், குழந்தை மணங்கள் நடைபெற்று வருவதினாலும், பலதார மணம் இந்தியாவில் அமுலில் இருப்பதினாலும் கர்ப்ப ஆட்சி மிகவும் இன்றியமையாததே. கலியாணமான பெண்களுக்கெல்லாம் கர்ப்ப ஆட்சி முறை போதனை செய்யப்பட வேண்டும்.

1. கர்ப்ப ஆட்சி முறை பெண்களுக்குத் தெரிந்திருந்தால் ஒவ்வொரு பிரசவத்துக்கும் இடையில் தேக பலத்தை விருத்தி செய்து கொள்ளப் போதுமான காலம் இருக்கும்படி பார்த்துக் கொள்வார்கள்.

2. பரம்பரை நோய்கள் வாராமலும் தடுக்கலாம்.

3. பொருளாதாரச் சார்பாகப் பார்த்தாலும் கர்ப்ப ஆட்சி தேவையானதே.

4. 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்களுக்கு கர்ப்ப ஆட்சி மிகவும் அத்தியாவசியமானது.

கர்ப்ப ஆட்சியினால் 1. விபசாரம் குறையும். 2. பலவீனமான அல்லது நோயுற்ற குழந்தைகள் பிறப்பது நிற்கும். 3. பரம்பரை நோய்கள் ஒழியும். 4. தாய் மரண விகிதம், சிசு மரண விகிதம் குறையும். 5. வறுமை, சிறு பெண்களின் பிரசவக் கஷ்டம், அனாதைச் சாலைகள் முதலியன குறையும்.

சரீரத்தையும், மனத்தையும் விருத்தி செய்துகொள்ள ஒவ்வொரு மனைவிக்கும் வசதியேற்படும்; அன்னவர்களில்

# கருப்புச்சட்டைப் படை அழைக்கிறது

(சேரன்)

ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டியவன் கோழை! இது அன்றைய திராவிடத்தின் பாசறை முழக்கம்! அந்நாள் திராவிடர் தீட்டிய வாட்கள்! வால் நீட்டிட வஞ்சகர் அஞ்சும் நாள் அந்நாள்! இன்றைய திராவிடம் பூட்டியகூண்டு! ஆரிய மரபு ஊட்டிய நஞ்சு மறத் தமிழர் நெஞ்சை மாட்டியிழுத்த நேரம்! வீழ்ச்சிப் படலத்தின் துவக்கத்தோடு அடிமை அத்தியாயமும் ஆரம்பமாயிற்று! ஆரியத்திற்குப் பாதபூசை! ஆரியத்திற்குப் பல்லக்கு! ஆரியத்திற்கு அரச மரியாதை! ஆரியத்திற்கு ஆலயம்! திராவிடர் இந்த முறையில்மானத்தை அடகு வைத்தனர். இன உணர்ச்சியை இரவல் கொடுத்தனர்! கம்பனின் கற்பனைப் பூங்காவில் கம்பராமாயணக் காம மலர்கள் கமழத் தொடங்கின! சேக்கிழாரின் சிந்தனைச் சோலையிலே பெரிய புராணப் பெரும் புற்றுகள் எழுந்தன! தமிழன் தாசனானதற்கு இவையேயன்றி இன்னும் பல முறிச் சீட்டுக்கள்!

இந்த நிலை நீண்ட நாள் வாழக் கூடியதா? வாழத்தான் முடியுமா? கண்டேன் சீதையை என்ற வார்த்தையில் கம்பரசம் சொட்டுகிறது என்ற கலை மூலாம் கலைக்கப்பட்டு, சைவத்திலே அன்பைப் பிசைந்து அளிக்கிறார் என்ற ஏமாற்று. மொழி சுரண்டப்பட்டு "கலை எது" என்று, முடிவு கட்டப்பட்டுவிட்டது. சுயராஜ்ய மெருகு தீட்டப்பட்ட ராம ராஜ்யம்! தீண்டாமை வர்ணம் பூசிய வர்ணாச்சிரமம்! ஏழைகள் ஸ்தாபனம் என்ற போர்டு தொங்கிய பிர்லா மாளிகை! இவைகள் நாடக மேடைத் தோற்றங்கள் என்று தீர்மானிக்கப்பட்டு விட்டன! அறிவுக்கு உபசாரம்! திறமைக்கு வணக்கம்! பாட்டாளிக்குப் பரிவு! இந்த நிலையைத் திராவிடர் எட்டிப் பிடிக்கும் வேளையிது! பல் விழுந்தவன் பாட வருவதும், கால் ஒடிந்தவன் நடனமாடுவதும் அரசியல் அரங்கத்தில் இனிச்செல்லாது, இளித்தவாயரல்ல இந்நாட்டு மக்கள் என்ற எச்சரிக்கையோடு, சிறுத்தையின் உறுமல்–சிங்கத்தின் சீற்றம்–கறுத்த கழுதையே! அங்கேன் கனைக்கிறாய்? என்ற கேள்விக் கூடமாயிற்று வாலிப உள்ளம்!

புகைந்த நெஞ்சங்கள் வெடிக்கும் எரிமலைகள் என்ற காட்சி! "திராவிடத்திற்கு விடுதலை! திராவிடர்க்கு விடுதலை!!" எங்கே? எப்பொழுது? ஆம்! இதோ! இப்பொழுதே!

திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திலே தீப்பொறி கிளம்பிற்று! திராவிட விடுதலைப்படை அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டது. நெருப்புமிழும் நெஞ்சினர் தேவை! இறப்பை விளையாட்டாகக் கருதும் இதயங்கள் தேவை! கிலி பிடித்த மனிதர்களைக் கீறி எறிய— புலி வாழ்வின் உச்சியிலே புதுமைதனைப் பொறித்திட, புரட்சிப் படையொன்று தேவை!

அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய அமைக்கப்படுகிறது கருப்புச் சட்டைப் படை! கனல்கக்கும் எண்ணங்கள்! அனல் வீசும் நிகழ்ச்சிகள்! எழுத்துக் கோர்வையல்ல! எதிர்பார்க்கும் கிளர்ச்சி!

ஏன் நீங்கள் இன்னும் வாளாயிருக்கிறீர்கள்? கருப்புச் சட்டைப் படை யழைக்கிறது தோழர்களே! கவனமிருக்கட்டும்! ஆரிய ஆங்கில ஆலிங்கனம் நகை சிந்துகிறது. பகை கிழிக்கக் குகைவிட்டுக் கிளம்புங்கள்! பாசறை நோக்கிப் பெயர் பொறித்து அனுப்புங்கள்! தீங்குகள் முறியும்! திராவிடம் பிரியும்!

## விபரீதப் போக்கு

திருவத்திபுரம் சுயமரியாதைத் திராவிட கழகச் செயலாளரான தோழர் எம். என். இராசமாணிக்கம் அவர்கள் சென்னை, ஸ்தலஸ்தாபன அதிகாரி (Inspector of Local Boards) க்கு கீழ்க்கண்டவாறு மனுச்செய்திருக்கிறார்.

"இளைஞர் கழகத்தார் 70 "குடி அரசு" பதிப்பக நூல்களை திருவத்திபுரம் பஞ்சாயத்து போர்டு பொது நூல் நிலையத்தாருக்கு ஏற்றுக்கொள்ளுமாறு அளித்தனர். போர்டார் காலதாமதம் செய்து வருகிறார்கள். இவை நூல்களை ஏற்றுக்கொள்ளாதிருக்க வேண்டுமென்றே செய்யும் தடங்கல்களாகும். ஆதலால் தயவு செய்து இதை சீர்தூக்கி நூல்களை ஏற்றுக்கொள்ளுமாறு போர்டு பிரசிடென்டுக்கு உத்தரவிட வேண்டுகிறோம்."

# குண்டு வீச்சு!

(விமானி)

### அவரது சிஷ்யர்!

ராஜகோபாலாச்சாரியார்--காமராஜர் ஊடல் தீரும்வரை உண்ணா விரதமிருக்கப்போவதாக தோழர் சர்தார் வேதரெத்தினம் பயமுறுத்தினாராம். காந்தியாரின் சிஷ்யர் என்பதை வேறு எப்படித்தான் காட்டிக்கொள்வது! சர்தாரின் சஞ்சலத்திற்கு சக்கரவர்த்தியார் செந்தூரமளித்ததாகக் கேள்வி!

### அய்யய்யோ!

"ரத்தம் சிந்தி வளர்க்கப்பட்டது காங்கரஸ்"

இந்த வாரத் தினசரியில் கொட்டையெழுத்துச் செய்தியிது!

அய்யய்யோ! நாமக்கல் கவிஞரின் "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது!" என்ற பாட்டு என்னாவது?

### சங்கடமான சபதம்!

இந்துமதி, டெண்டுல்கார், திருமணத்தன்று "சுயராஜ்யம் வரும் வரை பிள்ளை பெறக் கூடாது" என காந்தியார் வாழ்த்தினாராம். ஆனால் புலன்களை அடக்க முடியாதெனத் தோழர் டெண்டுல்கார் அறிக்கையில் நயமாகக் குறிப்பிட்டிருக்கிறார். தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பானேன் பாபம்! ஒத்துழையாமை, சத்யாக்கிரகம், மௌன விரதம் ஆகியவற்றோடு சதிபதிகள் சபதமும் காந்தியார் அகராதியில் இடம் பெறுகிறது போலும்!

---

கர்ப்பவதியாகாமல், தேகபலமும், ஆரோக்கியமும் பூரணமாயிருக்கும்போது கர்ப்பவதிகளாகி சுகமாகப் பிரசவிக்க பெண்களுக்கு வசதியேற்படும். தன் சுகத்தையும், குழந்தைகள் சுகத்தையும் கவனித்து விருத்திசெய்யப் பெண்களுக்கு சக்தியுண்டாகும்.

ரோஜா முத்தையா

# தீபாவளி கொண்டாடாத தீரர்கள்

## இதுவரை 5000 தோழர்கள்!

(திராவிடருக்கு இழுக்கு விளைக்கும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதில்லையென ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான தோழர்கள் கையொப்பங்கள் அனுப்பி வருகிறார்கள். இந்த ஆண்டும் அந்தப் பட்டியில் ஆயிரக்கணக்கான தோழர்களும், தாய்மார்களும், மாணவர்களும் சேர்ந்துள்ளனர். குடும்பத்தோடு கொண்டாடுவதில்லையென்றும் பலர் உறுதிமொழி அனுப்பியுள்ளனர். சென்ற வாரம்வரை ஆயிரம் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. இடமின்மையாலும், பலர் கையெழுத்துக்கள் கண்டுபிடிக்க முடியாமலிருப்பதாலும் சுமார் 3000 தோழர்களின் பெயர்கள் மட்டுமே இந்த வாரம் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்கள், இவர்கள்!)

**கும்பகோணம்**

வி சின்னதம்பி கே எஸ் ராசாங்கம் சி செருவலிங்கம் எஸ் தியாகராசன் எல் ரங்கசாமி பீ ச ரெங்கசாமி ஆர் பி சுந்தரம் ஆர் பி கிருஷ்ணன் கே முத்துவீரு எஸ் மோகன் பி ஏ, டி பி கோவிந்தராசலு எஸ் நடராசன் கே பிச்சய்யன் ஏ சோமசுந்தரம் எம் ராமச்சந்திரன் எஸ் மாரிமுத்து ஆர் நடராசன் ஆர் வரதன் கே கலியபெருமாள் ஆர் சோமசுந்தரம் பொ ரெத்தினம் எம் பிச்சய்யன் வி பொன்னுசாமி எம் தெய்வசிகாமணி ஏ ருத்திராபதி வி. வைத்தியலிங்கம் ஆர் சீனிவாசன் எஸ் கோபால் ஆர் பி சாரங்கன் கு ப் பொன்வேலன் எஸ் கிருஷ்ணமூர்த்தி எல் கணபதி தி சா சோ சாமிநாதன் எஸ் கோவிந்தசாமி எம் ராமைய்யா எஸ் செகநாதன் எஸ் சோமசுந்தரம் ஆண்டியப்பன் எல் ராமசாமி ஜி. பாலய்யன் கே ஞானசுந்தரம் எம் கருப்பையன் ஆர் பெருமாள் பி கோவிந்தராசலு எஸ் பக்கிரிசாமி எஸ் முத்தையன் எம் கிருஷ்ணன் எஸ் நாராயணசாமி கே வரதராஜலு பி சந்தானம் என் சாமிநாதன் எஸ் ஆர் தாஸ் ஆர் பாஷ்யம் எம் எஸ் சுப்பய்யா வி ஜெயராமன் வி சீராமுலு என் பெரியசாமி கே ராமநாதன் கே டி ராசகோபால் என் ரெங்கநாதன் எஸ் பாண்டுரங்கன் எஸ் சீராமுலு ஜி சுப்பையா எம் தங்கவேலு சா குருநாதன் ஏ பழனிசாமி எம் ராமதாஸ் வி பராங்குசம் பி முத்து தனபாலன் எஸ் நடேச ஆசாரி கே எக்ஞசாமி பத்தர் ஆர் பரிமணம் ஆர் லெக்ஷ்மணன் என் சாமிநாதன் வி கோவிந்தராசலு வி எஸ் தண்டபாணி ஆர் பெருமாள் எஸ் பக்கிரிசாமி எஸ் சாமிநாதன் ஏ சிங்காரவேலு கே கோபால்சாமி ஆர் கன்னையன் டி வி கே சாமி எம் வைத்திலிங்கம் எல் ரெத்தினம் பி பூபாலன் கே பெரியதம்பி சி ராமதாஸ் டி பரமசிவம் எஸ் டி ராஜரெத்தினம் எஸ் சட்டநாதன் ஜி பி சாமி ஏ சி வேலு எஸ் கே சுப்பையா எம் சுந்தரராசன் ஏ வி ரமணி எம் வி உத்ராபதி எம் என் லட்சுமணன் ரெட்டி எஸ் நாகராசன் ஐ பி பொன்னையா கே பழனி கே பி தர்மலிங்கம் தா கு முத்துக்கிருஷ்ணன் அ அய்யம்பெருமாள் ஆ சீனிவாசன் ஆர் நடராசன் கே ஆர் அமுர்தலிங்கம் வி எஸ் நாதன் பி நாகராசன் ஜி சாமிநாதன் எஸ் சண்முகம் எம் சாரங்கபாணி டி எஸ் சாமிநாதன் ஏ சந்தானம் சாமிநாதன் ஆர் வெங்கடேசன் ஏ எஸ் சி பொன்னம்பலம் ஏ எஸ் சி மகாலிங்கம் எஸ் கே சாமி சி வீரப்பன் மா கணபதி எஸ் அருணாசலம் ஏ லட்சுமணன் என் கோவிந்தசாமிகோன் எஸ் குருசாமி எம் சேதுராமன் எஸ் சுப்பராயன் சி கோவிந்தசாமி ஜி கோபால் பொன்னம்பலம் ரெ கல்யாணசுந்தரம் பொ இரத்தினம் வி கோவிந்தராசன் இரா கமலம் ரெ இராசகோபால் எஸ் லட்சுமணன் எம் கணேசன் என் ராமலிங்கம் சி சற்குருநாதன் எஸ் சிங்காரவேலு எஸ் குமாரசாமி ஆர் சிவகுரு கோ சுப்பராயன் எல் லட்சுமணன் ரா ரெங்கநாதன் எஸ் கணேசன் ஏ பி ஜெயராமன் த ச செல்வராசு சரவணன் சந்தானசாமி இரா சொக்கப்பா லெ திருவேங்கடம் மா தம்புராசன் ஆர் சுவாமிநாதன் என் ராமலிங்கம் ஆர் பாலகிருஷ்ணன் ஆர் சந்தானகிருஷ்ணன் சு மா லிங்கம் ஆர் சங்கரலிங்கம் ஜி ராமமூர்த்தி டி கே கோவிந்தராசலு அ, பாலசுந்தரம் ப பாலகிருஷ்ணன் சு கண்ணுசாமி வே. சுந்தரமூர்த்தி மு வரதராசன் ம கல்யாணசுந்தரம் பி நம்மாழ்வார் டி சி எஸ் நம்பியார் என் ராமலிங்கம் வி கோவிந்தராசன் எஸ் ராமானுசம் என் பாண்டுரங்கன் ஏ ராமநாதன் ஆர் ராமமூர்த்தி ஆர் சுவாமிநாதன் டி ஜே மானுவல் டி சந்தானம் அ முருகையன் டி மகிமைதாஸ் எம் வி கிருஷ்ணய்யன் த ந கல்யாணசுந்தரம் ரெ கோவிந்தராசன் து பாலகிருட்டினன் நா விசயராகவன் டி வி கோச்சட் எஸ் ராமய்யன் ஆர் இலக்குமிபதி ஜி பி மணி எஸ் சுந்தரமூர்த்தி ஜி திருஞானம் எஸ் சுப்பிரமணியன் வி குமாரசாமி கோ ராமய்யா எஸ் ரங்கநாதன் என் முத்துக்குமரன் வி. லக்ஷ்மணன் பி ஆர் சீனிவாசன் நா பாண்டுரங்கன் ஜி நடேசன் அ லெக்ஷ்மணன் கே அமிர்தலிங்கம் ஜி சிவசாமி கே வீரராஜ் கே சுப்பிரமணியன் ஜி ஜெயராம்.

**சோழங்கநல்லூர்**

வி. சீனிவாசன்.

**கோனூட்டு**

பி பெரியசாமி வீ க சண்முகம் எஸ் எஸ் கணபதி கு அ சண்முகம் கே வி ரெங்கசாமி கே வேலு எம் கே பெருமாள் ஏ பாக்கியம் எஸ் சாமிதாசு ஆர் சோலைமலை சண்முகதேவர் மு பெருமாள் கே சுப்பையா வே அமிர்தராஜி ச கா நந்தன் கு அ நவசிவாயம் மா பெருமாள் தே மிக்கேல் கே கருப்பையா கே ராமய்யா டி சண்முகம் டி நெருஞ்சி க ரு பாலையா க நெருஞ்சி சி கருப்பொன்னையா சி சப்பட்டை ச ரா சுப்பய்யா சே சின்னையா மாடசாமி செல்லையா ராயப்பன் வெ சி வெள்ளையா S சுப்பையா கணேசபுரம் சுப்பையா K S ஞானசுந்திரம் S செகநாதன் வெ வடிவேல் கே பி டேரின்பம் எ முத்துசாமி நாடார் பி செல்லையா S A சௌந்தரம் த ச வீரய்யா வே பார்வதி வி குன்ஞாக்கு சி பி கிருஷ்ணன் K S அழகம்மாள் மா அழகன் கே எம் கருப்பய்யா எம் அழகன் ஏ துரைசாமி டி மாடசாமி எல் மாடசாமி.

**விழுப்புரம்**

பி பொன்னம்பலம் குஞ்சம்மாள் செல்வ அரசு இளங்கோவன்.

**கோட்டாறு**

கே மதியழகன் என் சரஸ்வதி S சாவித்திரி எம் ராசேந்திரன் S கண்ணகி

**பெரியகுளம்**

கோ கோபாலன்.

**மதுரை**

வி ஏ ராஜாமணி சி வேலுசாமி M S ராமய்யா இ துரைசாமி எம் மாசிலாமணி S ராமசாமி கே மாணிக்கம் S ராசு ஏ வி மாணிக்கம் என் ரங்கசாமி பி. கணேசன் வி ராசு எம் அய்யாபிள்ளை கோ சுந்தரராசன் வி ஜி காவேரி அ ராமசாமி எம் பாக்கியம் அந்தோனி டி இ முத்து வி குருசாமி என் அய்யாவு நாராயணன் எம் ஆர் மாரியப்பநாயுடு S செல்லப்பன் என் கே கிருஷ்ணன் பி நடராசன் கருப்பையா ராக்கம்மாள் M S R பழனியம்மாள் எம் ஆர் திராவிடம் எம் ஆர் சந்திரசேகரன் எம் ஆர் சமத்துவம்.

**போடிநாயக்கனூர்**

V S குழந்தை என் கோதண்டபாணி வி பொன்னையன் கு அடைக்கலம் க பக்

கிரிசாமிதேவர் S சௌந்திரராச பெரிய நாயகத்தம்மாள் S. ராமசாமி சொ அம்மாக்கண்ணம்மாள் து கருப்பையா கே சுப்பையன் வை செ சிதம்பரம் எ சண்முகம் ஜி தெட்சணாமூர்த்தி K S சுப்பையன் செ வேலுக்கண்ணு பி தங்கவேலு பி கே சேது கே எம் வீராச்சாமி வீ சுப்பையன் கே கணேசன் கே மாணிக்கம் அ சுப்பையன் P S மணி பி பண்டரிநாதன் எம் கே மாருதி குருசாமி சதாசிவம் எம் வி அருணாசலம் வ துரைசாமி பாலகிருஷ்ணன் எம் கே ராஜசேகரன் சி மாணிக்கம் வீ நடேசன் ஆர் வேலுசாமி ஆவுடை எ காசிநாதர் மா ரெத்தினம் கா பெ ரெத்தினவேல் பிள்ளை விநாயகமூர்த்தி வி சுப்பண்ணன்.

அருப்புக்கோட்டை

ச. வீ. க. முத்துசாமி, சி. ச. கருப்பையா, அ. பாலசுப்ரமணியம், சி. பெ. ரத்தினம், எஸ். எஸ். பழனிசாமி, மு. ராசா, வ. ராஜப்பன், ப. ச. ராமசாமி, மு. ப. ஆறுமுகம், பி. ரத்தினசாமி, பி. வி. எஸ். எம். ரத்தினம், எ. சுந்தரராசன், மா. சிவசாமி, எஸ். எஸ். சர்க்கரைப்பாண்டியன், எஸ். செல்லையா, க. ராமய்யா, வீ. முத்துராமன், எம். சமதர்மன், சூ. ஆ. முத்துராமன், பூ. வ. ச. மு. நடராசன், நா. நாகுமணி, எஸ். லெனின், சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியன், பெ. செல்லம், பி. சுப்பையன், சி. முத்துசாமி, மு. மீ. சீனிப்பாண்டியன், சிவ. சண்முகசுந்தரன், அ. தில்லைச் சிதம்பரம், மீ. பெரியசாமி, கே. கணபதி, சி. பெ. நடராசன், கே. சண்முகவேலு, கே. முத்துவேலாகந்தன், நடராசன், ஆ. குருசாமி, ச. அருணகிரி, சிவ. குருசாமி, சி. அங்கப்பன், என். வி. ஆர். நடராசன், நாகுமணி, வா. மூ. கைலாசம், க. வாழவந்தான், டி. கே. சுப்ரமணியன்,

திருவாரூர்

கோ அண்ணாமலை எ மாசிலாமணி பி கணபதி ஆர் சிங்காரயர் பி வி ஓ ராசகோபால் டி கே விட்டல் மீனாம்பாள் சரோஜாபாய் தி வி நமசிவாயம் கே மாணிக்கம் பெ சதாசிவன் மடப்புரம் எஸ் கருணாநிதி அ. ருக்குமணி ரா வேதையன் கே. சோமாஸ்கந்தன் சி சிவசங்கரன் வி வீரப்பன் இ வி செங்குட்டுவன் சி தெட்சணாமூர்த்தி துரை ராஜய்யா வி ஜி அரங்கராசு வி ஜி பங்காரு வி. ஜி கண்ணையன் வி ஜி ஆர் திராவிடம் என் கண்ணையன் என் சீனிவாசன் ஜி தனலட்சுமி எ கோவிந்தராசு எஸ் ஆர் ராசு என் ருத்திராபதி ா தங்கவேல் எஸ் தியாகராசன் வி பங்காருசாமிநாயுடு எஸ் ஆர் லிங்கம் ஆர் வடிவேலு ஆ சண்முகம் இராம தமிழரசி ஆ சவுசுநாதன் இரா சந்திரகுப்தன் பி. சடகோபன் வீ நடேசன் கே பெருமாள் மா குருசாமி ரா பாவாடைராயன் கே பி வடிவேல் ஜெகநாதன் வி. முருகேசன்

பி ராசு வி என் வம்மணி எஸ் வடிவேலு இந்திராணி ஆ லெட்சுமணன் குஞ்சப்பன் துரைசாமி எம் நமசிவாயம் வி. பி. ராயன் பி ரங்கசாமி திருஞானம் பி வடிவேல்வைத்தியர் எஸ் கோவிந்தராசு இரா விசயராகவன் கேஆர் முத்துக்குமரன் ஞாயிறுஅடிகள் பெ தென்னன் மு குப்புசாமி எஸ் தங்கவேல் கே பி அஞ்சம்மாள் எஸ் மோகனாம்பாள் ஆர் வி தனலட்சுமி ஜி கோபால கிருஷ்ணன் எம் கே ஜம்புலிங்கம் புரு சுந்தானம் அ இராமா அமிர்தம் வி சண்முகம் கு தென்னன் எஸ் பாலசுப்பிரமணியன் தெ பழனிச்சாமி பி சந்திரன் ஜி என் சாமி எஸ் பி முருகப்பா தி மா தியாகராசன் சே குப்புசாமி பெ திருப்பதி ஆர் தியாகராசன்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை

எம் பி சுப்பிரமணியம் எ கணபதி எ எஸ் கந்தசாமி திருப்பதி அம்மாள் ராஜமாணிக்கம் கே சி கோபால் டி பி அர்த்தநாரி ஆர் பி பெருமாள் எஸ் முத்தியாலுசாமி சி திருமலையா சென்னையா குஞ்சிதம் பி என் கோபால் கே ஆர் செல்வமணி சி துரைசாமி ராமசாமி செட்டி கொ அ ஈஸ்வர செட்டி ஆர் கே சந்திரன் கே எம் சுப்ரமணி கே சௌந்திரையன் எல் சுப்ரமணியம் கே எம் பழனிசாமி ஆர் ஆர் சுப்பராமன் வி மத்தியாலு எஸ் ராமசாமி ஆர் வி வரதராஜலு வி ராமசாமி பி வரதராசு பி கே பத்மநாபன் பி கே ராமமூர்த்தி ஆர் சுப்ரமணியம்செட்டி எ சி ஈஸ்வரன் B R பழனிசாமி பே நா சின்னையன் கே வி தியாகராசன் பி எல் சங்கரன் பே நா லிங்கசாமி என் வி பத்தரைய்யா கே எம் பெருமாள் டி என் பெருமாள் பி வி வரதராஜலு சி. ஆர் பழனிசாமி அ அருணாசலம் வி கிருஷ்ணசாமி லிங்கம் சுப்மணியம் கந்தசாமி கே என் தருமைய செட்டி பு பெருமாள் செட்டி கே டி பன்னீர்செல்வம் சுப்புராமன் கே எஸ் ராசு செட்டி ஆர் சுந்திரையன் ஜெயகர் கே லெனின்பசா குப்புசாமி ப கு பார்வதி வரதராசலு பி கே ராசம்மாள் கந்தசாமி மனோரஞ்சிதம் பி ஜி மேனகா பட்டு கோபால் சவுண்டம்மாள் அனுசூயா லிங்கம் சு லட்சுமி பி வி சுந்தரைய்யா பி வி ஈஸ்பரி என் ஆர் சுப்ரமணி பி வி சுந்தரம் பி எ சித்தையா பி கே முத்தியால் பார்வதி அம்மாள் பி எம் ராமமூர்த்தி பி எம் பத்மா பி எஸ் குப்புசாமி எல் கே கிரி ராசம்மாள் கே எ நடராசன் கொ வ எகாம்பரம் ஆர் மாணிக்கம் நாயுடு எம் பி சவுண்டம்மாள் எம் பி சின்னராசு எம் சி லீலா எம் என் கவரம்மாள் ஆர் எம் குப்புசாமி S ராசமாணிக்கம் ஆர் பி அப்பாய் ஜி முத்துகிருஷ்ணன் ஆர் வி திரமல் பி எ வரதராசலு போ குப்புலு வி அய்யாவு பி எல் முத்துசாமி கே கோபால் கே வி கோபால் வி ரங்கையன் வி குப்பம்மாள் எஸ் வி மல்லையா கே எ மாணிக்கம் எ என் பழனிசாமி ஆ சி இராமநாதன் ஆர் எ ராமமூர்த்தி திரௌபதி அம்மாள் எஸ் பாப்பா செல்லமுத்து குண்டியம்மாள் தலமலயன் பி கே பழனி ராமநாத் கே ஆர் மணி அல்லிமுத்து R B உத்திரி புருடோத்தமன் சி அமிர்தலிங்கம் எஸ் சுப்ரமணியன் கே எஸ் சித்தையா கே இ சாம்பமூர்த்தி பி எஸ் வேலாசாமி எம் பி நடராசன் எ ஆர் குப்புசாமி எஸ் எம் நாராயணசாமி எஸ் பி முக்கண்ணன் என் குப்புசாமி ஆ ரா முத்தியால்செட்டி ஆர் எ பதி பி சுப்ரமணியன் கே எஸ் சுப்ரமணியன் எஸ் பண்டரிநாதன் ஆர் கிருஷ்ணமூர்த்தி ஜி வரதராசு முத்துசாமி ஆர் கோபால் எ எஸ் பழனியப்பன் கோவிந்தராஜலு ந பழனிசாமி எ எஸ் முனுசாமி கே எ அப்பாய் கே ஆர் தனக்கோடி எ சி துரைசாமி சி சங்கரய்யன் அ ராமலிங்கம் எ பெருமாள் இராசகோபால் திருப்பதி என் சாமிதுரை ஆர் ரத்தினம் K B கோவிந்தன் ஆர் எ சின்னதம்பு செட்டி சின்னன் எ சித்தய்யன் அ ச நடராசன் எம் எஸ் சுந்தசாமி எ எஸ் வெங்கட்ராமன் எ எஸ் கந்தசாமி முத்தம்மா பார்வதி

பட்டுக்கோட்டை

எம் ஆர் காசிநாதன் கே ராசகோபாலன் என் பெரியசாமி வி வெங்கடாசலம் வி சோமசுந்தரம் S பாலகிருஷ்ணன் பி சிதம்பரம் வி பாலதண்டாயுதபாணி எஸ் எம் லெட்சுமணன் ஆர் ஜெயராமன் ஆர் காசிநாதன் ஜி வெங்கடாசலம் எம் சின்னையன் கண்ணம்மாள் வி சின்னையன் வி சின்னையன் ஆர் பாலகிருட்டினன் கே நடராசன் ஆர் பாலசுப்ரமணியன் டி முருகையன் மாணிக்கம் அம்மாள் என் ராமாமிர்தம் ஆர் நவநீதம் மு கோவிந்தசாமி வி பி ராசகோபால் எம் சாமிநாதன் S சொக்கலிங்கம் சி என் விசுவநாதன் ஆர் என் ரத்தினம் S ராஜமாணிக்கம் சி என் வெங்கடேசன் ஜி சந்தான கிருஷ்ணன் பி வி கோபால கிருஷ்ணன் சு கோதண்டம் இரா சுப்ரமணியன் கே அருணாசலம் எம் எஸ் முத்துக்குமரன் ரெ சேதுராமன் ஜி பாலசுப்ரமணியம் என் பி காளியப்பன் என் ரெத்தினசாமி பாப்பையன் தெ வரதராசன் அப்பாவு ரெங்கசாமி அய்யாவு அ ராமசாமிரா சீனிவாசன் கு சுந்தரலிங்கம் து ஆத்மாராமன் பெ சுப்ரமணியன் என் கோவிந்தராசலு ரெ. காத்தமுத்து நடராசன் மா ஜெயராமன் பி ராமசாமி சு சண்முகம் ஆ கணேசன் ப சு வீரராகவன் ரெ சின்னையன் ரெ முருகையன் ப மாப்

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# தமிழ் நாட்டின் அதிசயங்கள்?

## I

ராஜகோபாலாச்சாரியாரை காங்கரஸ்காரர்கள் வேண்டாம் என்கிறார்கள்.

இதைச் சில பார்ப்பனர்கள் "சுயமரியாதைக்காரர்களால் உண்டாக்கப்பட்ட பார்ப்பனத் துவேஷத்தின் விளைவு" என்கிறார்கள்.

இது நிஜமாயிருந்தால் சுயமரியாதைக்காரருக்கு ஒரு பெருமைதான்.

## II

காங்கரசிலிருக்கும் பார்ப்பனரல்லாதார்கள் "இராஜகோபாலாச்சாரியை(பார்ப்பனத்தலைமையை) ஒழித்து பார்ப்பனரல்லாதாரையே வகுப்புவாரி விகிதாச்சாரம் சட்டசபை மந்திரி சபை முதலியவைகளுக்கு நியமித்து சமுதாய சீர்திருத்த வேலையும் தங்களால் முடியும் வரையெல்லாம் செய்வதாக ஒப்புக்கொண்டதினால்தான் ஜஸ்டிஸ்கட்சியின்பேரால் அபேட்சகர்களை நிறுத்தாமல் பெரியார் காங்கரசுக்காருக்கு லைன் கிளீன் டிக்கட்கொடுத்துவிட்டார்" என்று சில காங்கரஸ் பார்ப்பனரல்லாதவர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

இதுவும் நிஜமாய் இருக்குமானால் பார்ப்பனால்லாதாருக்கு (ஜஸ்டிஸ் கட்சியாருக்கு) பெரிய பிரைஸ் அடித்தாற்போல் தானே. 'ஜஸ்டிஸ்'காரர்களோ சட்டசபைக்குப் போக முடியாது. போவதாகவே வைத்துக்கொண்டாலும்


இப்படிப்பட்ட காங்கரஸ்காரர்கள் செய்வதைவிட என்ன அதிகமாய் செய்ய முடியும்? ஆகவே அப்படிச் சொல்லி லைன் கிளீன் செய்து கொடுத்திருந்தாலும் தப்பு என்ன?

மற்றும் பாலசுப்பிரமணியங்களைவிட குப்புசாமி, அண்ணாமலைகள் எந்தவிதத்தில் குறைந்தவர்கள். ஆனால் ஒரு குறைஉண்டு காங்கரசில் ஒரு காங்கரஸ் திராவிடனைப் பார்த்து உனக்கும் அண்ணாமலை, குப்புசாமிக்கும் என்ன வித்தியாசம் என்றால் எந்தக் காங்கிரஸ் தமிழனும் பெருமையாக நினைப்பான். ஆனால் போலி ஜஸ்டிஸ் கட்சியில் இருக்கும் தமிழன் ஒருவனைப் பார்த்துக் கூட உனக்கும் "பாலசுப்ரமணியத்திற்கும் என்ன வித்தியாசம்" என்றால் உடனே கேட்கப்பட்டவன் மானநஷ்ட வழக்குத் தொடரப் பதருவான்.

ஆதலால் இந்த லைன் கிளீன் சங்கதி இருபுறமும் நிஜமாய் இருக்குமானால் அது கவலைப் படவேண்டிய விஷயமாக இருக்க முடியாது.

## III

"ராஜகோபாலச் சாரியாருக்கும் பெரியார் ராமசாமிக்கும் ஏதோ ரகசிய ஒப்பந்தம் இருக்கிறது அதனால் தான் பெரியார் ஆச்சாரியாரைப் புகழ்ந்தும் ஆதரித்தும் பேசி வருகிறார். ஆதலால் பெரியார் சீக்கிரம் காங்கரசிலும் சேர்ந்துவிடலாம்" என்கின்ற சேதி சுயமரியாதை—ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் சிலருக்குள் பேசப்பட்டு வருகிறது.



திருச்சி மாநாடுகளில் 50000மக்கள் குழுமி இருந்த செல்வப் பந்தல் அலங்கரிப்பு வேலை நடக்கிறது.

அப்படித்தான் இருக்கட்டுமே இதைப் பெரியாரே வெளிப்படையாய் பல தடவை நிபந்தனை வைத்து இந்தப்படி பேசியும் எழுதியும் வருகிறார்.

அதாவது

"ஆச்சாரியார், கூர்மையான புத்தியுள்ளவர், கெட்டிக்காரர், நல்ல உழைப்பாளி, அடக்கி ஆளத் தகுதியுடைய ஆணவம் படைத்தவர், நினைத்ததைக் கொள்கையாக்கும் திறமைபடைத்தவர், யாருக்கும் இளைத்திருக்காத களங்கமற்ற தியாகி என்று சொல்லுகிறார் அப்படியெல்லாம். சொல்லிவிட்டு உடனே "ஆனால்" என்று சொல்லி, இவ்வளவு சொல்லத்தகுந்த ஆச்சாரியார் அந்தப் பெருமைகளை, சக்திகளை நமக்கு (திராவிடர்களுக்கு) விரோதமாய் பயன்படுத்தி பார்ப்பனர் வீழ்ச்சி அடையாமல் காப்பாற்றப்படுவதற்குப் பயன்படுத்துகிறார். ஆதலால் இவர் நமக்கு ஒரு பெரிய எதிரி" என்று சொல்லியே அந்த வாக்கியத்தை முடிக்கிறார். ஆதலால் ஆச்சாரியாரைப் பெரியார் சிறப்பாகக் கூறுவதில் குறை காணவோ, கெடுதி காணவோ இடமில்லை.

பெரியார் காங்கரசில் சேருவது என்பதும்கூட அடிக்கடி பெரியார் "நான் காங்கரசில்" சேருவேன், அதையும் கைப்பற்றுவேன், அதற்கும் தலைமை வகிப்பேன் என்னால் முடியும்" என்று சொல்லி வருகிறார். அந்தப்படி சொல்லிவிட்டு உடனே 'ஆனால்' போட்டு காங்கரஸ் வடநாட்டார் ஆதிக்கமோ அதிகார சம்மந்தமோ அடியோடு இல்லாமல் இருக்கும்படியான விதிமுறைகள் ஏற்படுமானால் தான்" என்கிறார். அப்படியானால் காங்கரசைக் கைப்பற்ற முடியாதா? அல்லது சேர்ந்தால்தான் தப்பா?

### பேசிக்கோள்ளுவதற்கு ஏற்ப அமைதல்


ராஜகோபாலாச்சாரியாரை காங்கரசில் வரக்கூடாது என்று தள்ளப்பார்க்கிறவர்கள் பார்ப்பனரல்லாதார் என்றும் அவரைவிரும்புகிறவர்கள்பார்ப்பனர்கள் என்றும் ஆகவே காங்கரசில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிரச்சினை வெகுநாளாக புகைந்துகொண்டு இருந்ததானது இப்போது பற்றிக் கொண்டது என்றும்,மக்கள்,ஏன்? காங்கரஸ்காரர்கள்கூட பேசிய வண்ணம் இருக்கிறார்கள்.

அதற்கேற்பவே நடவடிக்கைகளும் இருக்கிறன.


உதாரணமாக கடலூரிலிருந்து காங்கரஸ் தலைவர் காமராஜநாடா

(தொடர்ச்சி 1[illegible]ம் பக்கம்)

# திருச்சி மாநாட்டுக் காட்சிகள்



30000 மக்கள் கொண்ட ஊர்வலத்தின் முன் பகுதி



ஊர்வலத்தில் மாநாட்டுத் தலைவர்கள் பெரியார் ஈ. வெ. ரா., தோழர் டி. சண்முகம்



[illegible]
பி. ஏ., கொடியேற்றுகிறார்.



தலைவர்கள் மோட்டாரைச்சுற்றி திராவிடத் தொண்டர் படையினர் கைகோர்த்து அணிவகுப்பு நடத்தும் காட்சி.

## நடக்க இருப்பவை!

● அருப்புக்கோட்டையில் தீபாவளி தினத்தன்று தீபாவளியை எதிர்த்து கருப்பு உடை, கருப்புக் கொடியுடன் தோழர் எஸ். எஸ். பழனிச்சாமி தலைமையில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

● சென்னை 6வது சுயமரியாதை மாநாட்டு வரவேற்புக் கமிட்டிக்கூட்டம் 7-11-45 மாலை 6மணிக்கு பார்க்டவுன் பொம்மு செட்டித் தெரு 11வது இல்ல மாடியில் நடைபெறும்.

● பொள்ளாச்சியில் நிகழஇருக்கும் கோவை மாவட்ட 6வது திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) மாநாட்டு வரவேற்புக் கழகத் தேர்தல் 7-11-45 பொள்ளாச்சி நாராயண டாக்கி தியேட்டரில் காலை 11-மணிக்கு நடைபெறும். மாநாடு பற்றிய பல செய்திகள் யோசிக்கப்படும்.

● சென்னையில் 4-11-45ல் ஆதியப்பநாயக்கன் தெருவில் சுவாமி தர்ம தீர்த்தாஜி மகாராஜ் பி. ஏ., எல். எல். பி. தலைமையில் நடைபெறும், தயானந்தர் திருநாளில் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் தோழர் அன்பழகன் பி. ஏ.. (ஆனர்ஸ்) சொற்பொழிவாற்றுவார்.

● சேலம் அம்மாபேட்டை திராவிடர் கழக ஆண்டுவிழா 4-11-45 காலை 8மணிக்கு பெரியார் ஈ. வெ, ரா. அவர்கள் தலைமையில் துவக்கப்படும்.

● தஞ்சை நகர திராவிடர் கழகத்தின் ஆதரவில் தஞ்சை தெற்கு வீதி மண்டபத்தின் மாடியில் 4-11-45 ஞாயிறு இரவு 8மணிக்கு இயக்கத் தோழர்கள் கூட்டம் நடைபெறும். திராவிடத் தோழர்கள் அனைவரும் வருக.

### தோழர்களுக்கு!

### வேண்டுகோள்

தஞ்சையில் நடைபெறும் எந்த விதமான பொதுக் கூட்டங்களிலும், மாநாடுகளிலும் கேள்விகள் கேட்கக் கூடாதென்று திராவிடர்களையும், சுயமரியாதைத் தோழர்களையும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தஞ்சை நகர திராவிடர்
கழகத்தார்.

## பெரியார் 67-வது ஆண்டு விழா!

கீழ்க்கண்ட இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

o o

கோபி மறுமலர்ச்சிக்கழகம் 23-9-45ல் தோழர் நெடுஞ்செழியன் பேசினார்.

o o

பம்தாய் தாராவி திராவிட நாடு பகுத்தறிவு நிலையத்தில் தோழர் சவரிதாசன் தலைமையில் தோழர்கள் வடிவேல், கணபதி, பாலகிருஷ்ணன், பெரியசாமி ஆகியோர் பேசினர்.

o o

அருப்புக்கோட்டையில் 16-9-45-ல் தியாகராய வாலிபர் சங்க முன்பாக கருப்பையா தலைமையில் நடந்த விழாவில் தோழர்கள் சி. பி. சின்னராசு, டி. கே. சுப்ரமணியம், எஸ். எஸ். பழனிச்சாமி, ரெத்தினம் ஆகியோர் பேசினர்.

o o

திருவத்திபுரம் சுயமரியாதைத் திராவிட இளைஞர் கழகத்தில் 24-9-45 மாலை பெரியார் பட ஊர்வலமும் மாபெருங் கூட்டமும் நடைபெற்றது.

o o

வில்வாரணி திராவிடர் கழகத்தில் தோழர் சாமிநாதன் தலைமையில் தோழர்கள் ஏ.கே. ஐயா, இராவணன், பாலையா, இரண்யன் ஆகியோர் பேசினர்.

o o

திருச்சி ஜில்லா வாகனகர் மருத்துவர் சங்கம் 16-10-45-ல் பொதுக்கூட்டம்.

o o

ஜெயங்கொண்டம் திராவிடர் கழகச் சார்பில் 28-10-45 மாலை தோழர் எம். பாஸ்கரன் தலைமையில் கொண்டாடப்பட்டது. குதிரையில் பெரியார் பட ஊர்வலம் நடைபெற்று மாலையில் நிகழ்ந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஆ. திராவிடமணி பி. ஏ., இராமாமிர்தத்தம்மாள், மு. கருணாநிதி, இளவழகன், மெத்தாலா ஆகியோர்சொற்பொழிவாற்றினார்கள். குழந்தைகட்குத் தின்பண்டம்வழங்கப்பட்டது. தோழர்கள்திராவிடமணியும், இளவழகனும் கருப்புச்சட்டை அணிந்து வந்திருந்தனர். ஜெயங்கொண்டத்தில் உயர்நிலைப் பள்ளி நிறுவ வேண்டுமென்றும், புள்ளம்பாடி வாய்க்காலை ஜெயங்கொண்டத்தின் வழியாக வெட்டி தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்றும்மேலதிகாரிகளைக் கேட்பதாகத் தீர்மானங்கள் நிறைவேறின.

o o

திருமங்கலத்தில்21-10-45-ல்பெரியார் பட ஊர்வலமும், மாலை 6 மணிக்கு மணக்கால் தோழர் ராமசாமி தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் நெடுமாறன், வீரமுத்து, தஞ்சை எஸ். எஸ். மணி, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர். லால்குடி ஹரிஜன மாணவர் விடுதி மாணவர் கே. ஆர். மருதையா-வை திராவிடர் மாநாட்டில் கலந்துகொண்டதற்காக விடுதியை விட்டு விலக்கியதை கண்டித்துத் தீர்மானம் நிறைவேறியது.

## மணமகன் தேவை

மணமாகாத 5-வது பாரத்தில் படிபாகக் கொண்டிருக்கும் 19 வயதுடைய கார்காத்த சோழியவேளாள வகுப்புப் பெண்ணொன்று மணந்துகொள்ள தன்மானப் பற்றுதலும்நற் படிப்பும் உடைய அதே வகுப்பைச் சார்ந்த மணமகன் தேவை.

K. S. S.
C/o கே. கே. நீலமேகம்,
கும்பகோணம்.


மலேயாவிலுள்ள ஒரு அதிகாரியிடமிருந்து கிடைத்த
7-10-45ந் தேதி கடிதத்தில் காணப்படும் குறிப்புகள்:
"வேறு எதையும் விட நமக்கு மிகவும் தேவையானது
"சௌகரியங்கள்"—மிக அவசரமாக!
இந்தத் தேவையைத்தான்

**மே. த. கவர்னரின்**

கஷ்ட நிவாரண சகாய நிதி,
பூர்த்திசெய்ய முயற்சிக்கிறது. அதற்கு உதவி
அவசரமாக தேவை.
எனவே

"கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு" என்று குறிப்பிட்டு
"ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் கஷ்ட நிவாரண சகாயநிதி,
C/o இம்பீரியல் பாங்க், இந்தியா" என்ற விலாசத்துக்கு
தயவு செய்து பணம் அனுப்பி உதவுங்கள்.

குடி அரசு

1945-ௗு நவம்பர் ௴ 3-ௗ

## N.S. கிருஷ்ணனுக்கு 14 வருட கடின காவல் தண்டனை

"அய்யோ! கிருஷ்ணா உனக்கா இந்த கதி! உனக்கா தீவாந்தர சிக்ஷை! உண்மையிலா உனக்கு! நீ 14-வருட காலம். சிறையில் கடினகாவல் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்ற தீர்ப்புக் கூறி உன் வாழ்வு முடிக்கப்பட்டு விட்டதா? 'அசல் தீர்ப்பு கொடுமை கொடுமை' என்றால் 'அப்பீல் தீர்ப்பு அதனினும்'கடுமை கடுமை', என்று சொல்லத்தக்கதாகவல்லவா ஆகிவிட்டது. இந்தச் சேதியைய் கேட்கவே காதில் எறிசூலம் பாய்வது போல் இருக்கிறதே, நினைக்கவே நெஞ்சம் வெடித்து விடும்போல் இருக்கிறதே, இப்படி ஒரு உலகம், இப்படி ஒரு நடவடிக்கை, இப்படி ஒரு நீதி என்றால் உலகத்திற்கு மனிதர்கள் வேண்டுமா? என்று தோன்றுகிறதே! நிஜமாகவா நீ குற்றவாளி? இது என்ன தண்டனை? எதற்காக இந்த தண்டனை அடைந்தாய்? நீதிக்கு ஆகவா? சட்டத்திற்கு ஆகவா? நிஜமான நடத்தைக்கு ஆகவா? அல்லது நம் எதிரிகளின் ஆசைக்கு ஆகவா? எதற்கு ஆக இந்த தண்டனை? ஒன்றும் புரியமாட்டேன் என்கிறதே, உண்மையாக நீ குற்றவாளியா? உன் விஷயத்திலா சாட்சியும், சட்டமும், நீதியும் நீதிபதிகள் இஷ்டமும் இப்படிப் பயன்பட வேண்டும்?

"அடடா, அளவுக்கு மீறிய பரிதாப சம்பவமே! இதை எப்படிப் பொறுப்பது! தமிழ் மணியே! தமிழர் மூடநம்பிக்கை வாழ்வைத் திருத்த முயன்ற தவமணியே!! நீ சிறையில்,–14 வருஷம் சிறையில்,–கடின காவல் தண்டனையாய் சிறையில்—வதிவதை, வாடுவதை உண்மைத் தமிழ் மக்கள் எப்படிப் பொறுத்திருப்பார்கள்? என்பது விளங்கவில்லையே? என் அதுவரைப் பொறுத்திருக்கவேண்டும்? என்பதும் புரியவில்லையே"

என்பதாக. இன்று தமிழ்நாடு எங்கும் கிருஷ்ணனைப் பற்றியும், பாகவதரைப் பற்றியும் கூறியவண்ணம் கூச்சலும் கொதிப்புமாக மக்கள் காணப்படுவதுடன் பார்க்கின்ற முகமெல்லாம் பதறிப் பதறிப் பரிதவிக்கின்ற முகங்களாகவே காட்சியளிக்கின்றன.

வாசகர்களே இந்த சேதியும் சம்பவமும் காட்சியும் உண்மையில் சகிக்க முடியாத சங்கடத்தைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கிறது என்பது மிகைபடுத்திக் கூறுவதல்ல என்பது உங்களுக்கே தெரியும். இது தமிழ் மக்களினுடைய ஒரு மனப்பட்ட ஒன்றுபோன்ற கஷ்டமான சகிக்க முடியாத சம்பவம் என்பதிலும் மாறு இல்லை எனலாம்.

சரி! நம் துக்கத்துக்கு எல்லை இதுவரை போதும். எப்படியோ தமிழ் மணிகளுக்கு இந்த நிலை ஏற்பட்டு விட்டது. யார் மீதும் குற்றம் கூறுவதில் பயனில்லை. எவரையும் நோவதிலும் அறிவுடைமை இல்லை. இனி இதற்கு என்ன பரிகாரம்? என்பதைப் பற்றிச் சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வந்து இவர்களை விடுவிப்பதுதான் உண்மையில் சங்கடப்படும் மக்களின் கடமையாகும். இதை விளையாட்டாகவோ, வீண் வார்த்தை அலங்காரமாகவோ எவரும் எந்தத் தமிழரும் கருதக்கூடாது. தமிழ் மக்களுக்கு இது ஒரு புது முறையான கேடு என்பதையும், இதற்குப் பரிகாரம் செய்ய ஒவ்வொரு தமிழ் மகனும் கடமைப்பட்டவனாவான் என்பதையும் தமிழர் யாவரும் மனதிலிருத்த வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இதற்கு ஆக இவர்களது குடும்பத்தார்கள், சுற்றத்தார்கள் தோழர்கள் படும் துக்கத்தில்நாமும்கலந்து கொண்டு அவர்களுக்கு ஆறுதல் சொல்லுவதுடன் வேண்டுவன, ஆவன செய்யத் தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள் என்பதையும், செய்வார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுவதோடு பொது மக்களையும், இதற்கென ஒரு கிளர்ச்சி துவக்கவேண்டியதும், இதற்கென ஒரு நிதி திரட்டவேண்டியதும், நன்றிவிசுவாசம் உள்ள தமிழ் மக்களின் கடமையாகும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எப்படிப்பட்ட கிளர்ச்சி, எவ்வளவு நிதி என்பவைகள் உடனே மக்கள் கூடி முடிவு செய்யவேண்டியதாகும்.

---

## இன்றைய அரசியல் நிலை

இன்றைய அரசியல் நிலை உள்நாட்டுக் கலகமும் குழப்பமும் தான் என்பதை க்ண் கூடாகக் கண்டு வருகிறோம்.

முதலாவது இந்து முஸ்லீம் கலவரம். இதற்கு உதாரணம் பம்பாயில் சென்ற மாதம் நடந்த கலகம், அடிதடி, மண்டை உடைவு, ஆஸ்பத்திரி சேர்த்தல், சாவு, அரஸ்ட்டு ஆகியவைகள் போதும்.

முஸ்லிம்களுக்குள் கலாட்டா—இதற்கு உதாரணம் பஞ்சாப், பங்கால், அஸ்ஸாம், கான்பூர் முதல் சென்னை வரை நடைபெற்று வரும் கலாட்டாவும் குழப்பமும் போதும்.

இந்துக்களுக்குள்ளோ காங்கரஸ் கம்யூனிஸ்ட் கலகம், காங்கரஸ் இந்து மகாசபைக் கலவரம், ஜாதி இந்துக்கள்—தீண்டப்படாதார் வேற்றுமை வெறுப்பு, ஜாதி இந்துக்களுக்குள் ஆரியர்—திராவிடர் ("பிராமணர்—சூத்திரர்") குரோதம், வஞ்சம், கலவரம், நடைபெற்ற வண்ணமாக இருந்து வருவது போதும்.

இனி காங்கரசுக்குள் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் (ராஜாஜி—காமராஜி) கட்சிப் பிரிவு, அதன் பேரால் திருப்பரங்குன்றத்தில் இரண்டொரு பார்ப்பனருக்கு அடியும் பணம் பிடுங்கப்பட்டதுமான சேதியாகும்.

இவ்வளவும் தவிர திராவிடருக்குள்ளும் கட்சி, பட்டம் பதவியில் வெறுப்புக்கொண்டவர், தேர்தலை பகிஷ்கரித்தவர் கட்சி ஒன்று, பட்டம் பதவியில் நம்பிக்கை (ஆசை) கொண்ட தேர்தல் "கட்சியார்" என்கின்ற பிரிவு அதன் யோக்கியதை போதுமானதாகும்.

இவைகள் சட்டப்படி ஒழுங்குப்படி யோக்கியப் பொறுப்புப்படி நடக்கின்றனவா அல்லது போக்கடாத்தனமாக நடக்கின்றனவா

ரோஜா முத்தையா

# கருப்புச் சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கருப்புச் சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப் படுவார்கள் ஆதலால் அதில் சேர சம்மதமுள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தந்தை பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

என்பது வேறு விஷயம். ஆனாலும் இப்படிப்பட்ட நிலைமைதான் இன்று அரசியல் நிலையாக இந்த நாட்டு நிலையாக இருக்கிறது.

அரசாங்க நிர்வாகமோ நினைப்பதற்கே பயமாய் இருக்கிறது என்பதோடு பேசுவதற்கே வாய் கூசுகிறது என்றுதான் சொல்லவேண்டும். அதிகாரிகளுக்குள் லஞ்சம், கேள்வி கேட்பாடு அற்றுப் போய் விட்டது. இதற்கு வகுப்பு உணர்ச்சி, சர்க்காருக்கு வேண்டியவன் என்கின்ற உணர்ச்சி ஆதரவு. வகுப்புணர்ச்சிகளின்மீது பழிவாங்குதல், நியாயமற்ற முறையில் சலுகை காட்டி உதவி செய்தல், எரிகிற வீட்டில் பிடுங்கின வரை லாபம் என்கின்ற தன்மையில் அவரவர் சுயநலத்தை வளர்த்துக் கொள்ளுதல் ஆகியவை அதிசயப்படுவதற்கு இல்லாத மாதிரியில் நடைபெறுகின்றன. நீதியோ சொல்லத் தேவை இல்லை. நிர்வாகமோ பேசவே தேவை இல்லை என்கின்ற மாதிரியில் இருக்கின்றன. இவைகளுக்கு யார் மீது குற்றம் சொல்லுவது என்பது கண்டுபிடிக்க முடியாத பிரச்சினையாக இருக்கிறது. இந்த நிலைமைகளுக்கு உண்மையில் காரணம் சொல்லவேண்டுமானால் பெரும்பாலும் நம்நாட்டு மக்களின் தன்மை, யோக்கியதை ஆகியவைகள் தானே ஒழிய பிரிட்டிஷ் ஆட்சியோ, வெள்ளையர் தன்மையோ காரணம் என்பது வெகு தூரம் பொருத்தமற்றது என்றே சொல்லுவோம்.

இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் நாம் திராவிட மக்களாகிய நாம் செய்யவேண்டிய காரியம் என்ன என்று பார்ப்போமானால் நம் மக்களை ஒன்று சேர்த்து நம் வலுவை ஒன்று திரட்டிப் பெருக்கி நாம் ஒரு சமுதாய, ஒரு கொள்கை, ஒரு இலட்சிய மக்கள் என்பதாக ஆக்கப்படவேண்டியதேயாகும்.

ஆதலால் திராவிட மக்களே வாலிபர்களே தைரியமாய் அயோக்கியர்களை வெறுங்கள். அக்கிரமங்களை எதிர்த்து அஞ்சாநெஞ்சுடன் பலனை ஏந்தி நில்லுங்கள். உங்கள் எதிரிகளை வீழ்த்துவதற்கும், உங்களுக்குத் தொல்லை கொடுப்பவர்களை அடக்குவதற்கும் (ஆச்சாரியார் சொன்னது போல்) கிடைத்த ஆயுதத்தை (யாருடன் சேருவதையும்) பயன் படுத்திக் கொள்ளத் தவறாதீர்கள். இதில் ஒன்றும் முறை துறை பார்க்காதீர்கள். நமக்கு நல்ல சாவகாசம் (ஓய்வான காலம்) இருக்கிறது. முதலாவது தேர்தல் தொல்லை இல்லை. நம் கூட்டத்திற்குள் நம் விரோதிகளோ சமய சஞ்சீவிகளோ சுயநலக்காரர்களோ இல்லை. அவர்களுக்கு இடமும் இல்லை. சந்தேகத்துக்கு, குழப்பத்திற்கு, எதிரிகள் ஏச்சுக்கு இடமான கொள்கைகளோ, திட்டங்களோ இல்லை. இப்படிப்பட்ட நல்ல பாதுகாப்பும் பயனுள்ளதுமான நிலையில்—நேரத்தில் இருக்கிறோம் நாம். ஆதலால் ஒருமனப்பட்டு நம்திட்டங்களை நிறைவேற்ற ஒன்றுகூடி முனைந்து நில்லுங்கள் என்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

டிசம்பர் மாதத்தில் பெரிதும் சென்னையில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும்.

---

## அறிவிப்பு

ஜஸ்டிஸ் கட்சி அதன் 17-வது மாகாண மாநாட்டில் சட்டசபைத் தேர்தலைப் பஹிஷ்கரித்து இருக்கிறது. அதனால் மத்திய சட்டசபைத் தேர்தலுக்கு ஜஸ்டிஸ் கட்சி சார்பாக யாதொரு அபேட்சகர்களும் நிறுத்தப்படவில்லை என்று பொது மக்களுக்கும் ஓட்டர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியின் பேரால்நிற்பதாகச் சொல்லிக்கொண்டு யாராவது உங்களிடம் ஓட்டுக்கோ பணத்துக்கோ வந்தால் கட்சியின் பெருமையைக் காப்பதற்கு ஆக தயவு செய்து மறுத்துவிடுங்கள் என்று ஜஸ்டிஸ் கட்சி அன்பர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

---

## திருமணம்

மதுரை லட்சுமிபுரத்தில் 21-10-45 காலை 12 மணிக்கு தோழர் மதுரைக் கனி அவர்கள் சகோதரர் பெருமாளுக்கும், தோழர் சத்குரு சங்கரவேல் நாடார் புதல்வி சேதுக்கனிக்கும் குடந்தை தோழர் வி. சின்னத்தம்பி தலைமையில் திருமணம் நடைபெற்றதின் நினைவாகக் "குடி அரசு" க்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

---

பொள்ளாச்சி சலவைத்தொழிலாளர் சங்க ஆரம்பவிழா 15-10-45 தோழர் பி. என். இராமானுசம் தலைமையில்

...ராய்ச்சி நூலக அறக்கட்டளை

## பெரியார் ஈ. வெ. ரா. உடல் நிலை

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் கடந்த 4, 5 மாதங்களாக சிறிதும் ஓய்வில்லாமல் சுற்றுப் பிரயாணம் செய்ததாலும், உடல்நிலையைக் கவனிக்காததாலும் ஜீரணக் கோளாறும், உஷ்ணமும் ஏற்பட்டு காலில் வீக்கம் ஆகி, எப்பவும், சில சமயங்களில் விக்கலும், வயிறு உப்புசமும் இருந்து வருகிறது.

டாக்டர்கள் ஒருமாத காலமாவது ஓய்வு வேண்டும் என்று வலியுறுத்தி இருப்பதால் நவம்பர் மாதம் 4-ந் தேதி சேலம் அம்மாப்பேட்டை ஆண்டு விழாவுக்குச் சென்றுவிட்டு பிறகு நேரே குற்றாலம் செல்லத் தீர்மானித்து இருக்கிறார்.

இந்த ஒரு மாத காலத்தில் கருப்புச் சட்டைப் படை அமைப்பைத் தவிர வேறு முக்கியமான அலுவல்கள் ஒன்றும் செய்யவேண்டியதில்லை என்றும், தேர்தல் பிரசாரங்கள் எந்தக் கட்சியில் எப்படிச் செய்து கொண்டபோதிலும் அக்கூட்டங்களில் ஜஸ்டிஸ் கட்சியாரோ சுயமரியாதைக் கட்சியாரோ கண்டிப்பாய் பிரவேசிக்கக் கூடாதென்றும் தனது உடன் வேலைத் தோழர்களை வேண்டிக்கொள்ளுகிறார்.

டிசம்பரில் நிர்வாகக் கமிட்டி கூட்டி வேலை துவக்கலாம் என்பதாகக் கருதி இருக்கிறார்.

---

## தீபாவளி நாளில்!

(கோ. சி. பெரியசாமிப் புலவர், கரந்தை)

எண்சீர் விருத்தம்

நம்மவருள் சூரரெனும் பெயரைத் தாங்கி
நானிலத்தோர் போற்ற இவண் நன்றேயாற்றி,
நம் பகைவர் தமை வாட்டி நாளும் நாமே
நலங்கொள்ள இருந்தவனை நசுக்கி நாட்டில்
நம்மவரின் வெற்றியினை தாம் கொண்டாடத்
தகவிலார் ஆரியர்கள் சமைத்த செய்கை
இம்மையிலே அறியாராய் இவணுள்ளோர் கள்
இழிவினைத்தாம் கொண்டாடல் என்னே! என்னே!

ஆரியத்தின் கொடுமையினை அறிந்துள்ளோர் கள்
அவனியிலிந் நாளினையே அழிநாளென்று
காரியத்திற் கறுப்புடையே தரித்து நின்று
கண்ணீரும் கம்பலையும் காட்ட என்றும்
கோரியத்தன் தனைநினைந்த கொள்கை பூண்டு
கோல்சாய்த்த நூலினரின் கொடுமை மாற்றி
பாரிலத்தன் புகழ்பரப்பிப் பணிந்து போற்றி
பல்லாறாத் தமிழர் புகழ் பரப்புவோமே.

---

### திருப்பத்தூரில் பெரியார்!

28-10-45 ஞாயிறு காலை 10 மணிக்கு இவ்வூர் உயர்தரப் பாடசாலையில் தலைமை ஆசிரியர் தோழர் லட்சுமி நாராயண நாயுடு தலைமையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மாணவரின் எதிர்காலம் என்பது பற்றிப் பேசினார்கள். அன்று மாலை 6 மணிக்கு பெரியார் அவர்களையும், தோழர் பூ. கணேசனையும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு முனிசிபல் கவுன்சிலர் தோழர் சி. ஆர். அருணாசலம் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் பூ. கணேசன் [illegible] இரத்தம் என்பது பற்றிப் பேசிய பிறகு பெரியார் அவர்கள் திருச்சி மாநாட்டுத் தீர்மானம், நமது எதிர்கால வேலை, கருப்புச்சட்டைப் படை, பட்டம் பதவி விடுதல் முதலிய பல அரிய விஷயங்களை விளக்கி சுமார் 4 மணி நேரம் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். 5000 மக்கள் கூடியிருந்தனர். பல கேள்விகட்குப் பதில் அளித்தார். நமது கூட்டங்களிலும் கருப்புக் கொடிகள் இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்.

---

## அடுத்த போராட்டத்திற்குத் தயாராகுங்கள்!

### வடசென்னையில் பெரியார் முழக்கம்!

வடசென்னை தமிழ் இளைஞர் கழக 8-வது ஆண்டுவிழா 21-10-45 ஞாயிறு மாலை 5-30மணிக்கு தனலட்சுமி பாடசாலையில் நடைபெற்றது. தோழர் பழனிச்சாமி தலைமை வகித்தார். தோழர் மிராண்டா-கஜேந்திரன் பி.ஏ., தமிழ்க் கொடி உயர்த்தினார். தலைவர் பெரியார் அவர்கள் பலத்த கைதட்டுதலுக்கிடையே எழுந்து சுமார் $1\frac{1}{2}$-மணிநேரம் வீரவுரையாற்றி கருப்புச் சட்டை இயக்கத்தில் அனைவரும் சேர்ந்து திராவிட நாட்டு விடுதலைக்காகப் போராட வேண்டுமென்றும், கூடுமானால் இளைஞர்கள் தீவிரமாகப் பங்கு கொள்ள நேரிடும் என்றும், ஆகவே அடுத்த போராட்டத்திற்கு இளைஞர்கள் இப்பொழுதே தயாராகவேண்டுமென்றும் கூறினார். பின் தோழர்கள் அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஈ. வி. வள்ளிமுத்து, என். வி. நடராசன் ஆகியோர் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் எம். கே. டி. சுப்ரமணியம் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

## பதவி விட்டனர்!

10. திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற் கிணங்க திருப்பூர் தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்கள் தமக்கிருந்த முதல் வகுப்பு பெஞ்சுகோர்ட் உறுப்பினர் (Ist class Bench court) பதவியை 25-10-45-ல் ராஜினாமாச் செய்து விட்ட செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறார்.

*

11. திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற் கிணங்க நாமக்கல் தோழர் கே. கருப்பண்ணன் அவர்கள் பஞ்சாயத்துக் கோர்ட் தலைவர் பதவியை 6-10-45-ல் ராஜினாமாச் செய்துவிட்ட செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறார்.

## மறைவு

நமது ஆசிரியர் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களது புதல்வியும் ஈரோடு நகரசபைத் தலைவர் தோழர் ஆர். கே. வெங்கடசாமி நாயக்கர் துணைவியாருமாகிய தோழர் பாப்பாத்தி அம்மாள் அவர்கள் 24-10-45 இரவு சுமார் 11 மணிக்கு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் இயற்கை யெய்தினார். 26-10-45 காலை ஈரோட்டிற்கு கொண்டுவரப்பட்டு ஈமக் கடன்கள் நிறைவேறின. துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் அனுதாபம் உரித்ததாகுக.

நீடாமங்கலம் திராவிடர் கழகம் சுயமரியாதை சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர் தோழர் சிவராம கிருஷ்ணன் தந்தையார் திடீரென் இறந்துவிட்டமைக்கு மேற்கண்ட கழகங்கள் அனுதாபம் தெரிவிக்கின்றன.

கொடுமுடி தோழர் கே. ஏ. சந்திரசேகர் கவுண்டர் 28-10-45 இரவு 11-20 மணிக்கு இயற்கை யெய்தினார். 12-11-45 திங்களன்று இறுதிச் சடங்கு நடைபெறும்.

## முத்துப்பேட்டையில் தீபாவளி எதிர்ப்பு!

முத்துப்பேட்டை திராவிடர் கழகத்தின் சார்பாக தீபாவளி தினத்தன்று பல தோழர்கள் கருப்புச் சட்டையணிந்து துக்கம் தெரிவிப்பதென்றும் அன்று மாலை கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் தோழர் எஸ். கருணாநந்தம் பேசுவார். அவர்களில் தீபாவளி ஒழிப்பு உரைகள் தீட்டப்பட்டு 'தீபாவலி கொண்டாடுத'' (?) என்ற கட்டுரையையும் ஊரெங்கும் வழங்கப்படுகிறது.

## மாவட்ட மாணவர் மாநாடு

சேலம் மாவட்ட திராவிட மாணவர் முதலாவது மாநாடு திருச்செங்கோட்டில் நவம்பர் மாதம் 17, 18 தேதிகளில் நடைபெறுமென தோழர் கே. பரமசிவம் அறிவிக்கிறார்.

## எஸ். ஆர். சுப்பிரமணியம்

கோவை தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள் காலில் ஏற்பட்டுள்ள உருவிதமான கட்டியின் காரணமாய் கோவையில் டாக்டரிடம் ஒரு மாதமாய் [illegible] பெற்று வருகிறார்.

## அறிவிப்புகள்

7-11-45 முதல் "குடி அரசு" பதிப்பு புஸ்தகங்களும், தலைவர் படங்களும் கடைவீதியில் விற்கப்படும்.

ஏஜண்டு
எஸ். துரைசாமி,
ராசிபுரம்.

தஞ்சை ஜில்லாவில் கருப்புச் சட்டைப் படைக்கு வீரர்கள் சேர்ப்பதற்காக திருவாரூர் தோழர் வி. எஸ். பி யாகூப் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். தஞ்சை ஜில்லா தோழர்கள் அவரிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## மாயவரம் அருணகிரி இசை வேளாளர் வாலிபர் சங்க ஆண்டுவிழா!

7-10-45-ல் நடந்த ஆண்டுவிழாவில் நாதசுர வித்வான் கக்காய், டி. என். ஆர். நடராஜ சுந்தரம் பிள்ளை பாட்டும், திருவிழிமழலை சுப்பிரமணிய பிள்ளை பிடிலும், தமிழ் இன்னிசைப் பிரயோகர் சிதம்பரம், ஜெயராம் பிள்ளை மிருதங்கமும், கோவிந்தசாமி பிள்ளை முதர் சங்கும், நாதசுர அரசர் திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை கெஞ்சிராவும் கொண்ட இசையரங்கம் ஒன்று நடைபெற்றது.

## இரட்டைமலை சீனிவாசன் இரங்கற் கூட்டங்கள்

இரட்டைமலை தோழர் ஆர். சீனிவாசன் அவர்கள் காலஞ் சென்றமைக்காக, கீழ்க்கண்ட இடங்களில் இரங்கற் கூட்டங்கள் நடைபெற்றன.

பம்பாய் 24-9-45-ல் ஆதிதிராவிட மகாஜன சங்கம்.

வேலூரில் 21-9-45-ல் விரநட ராசன் வாலிபர் சங்கம்.

கோவையில் 24-9-45-ல் ஆதிதிராவிட மகாஜன சங்கம்.

தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்ய சங்கம்.

மேலப்பாளையம் ஆதிதிராவிட வாலிப அண்ணாதுரை பகுத்தறிவுக் கழகம்.

கோலார் தங்கவயல் சமரச செடியூல்டு வகுப்பினர் கழகம்.

கோலார் தங்கவயல் சாம்பியன் ரீப்ஸ் தென்னிந்திய பௌத்த சங்கம்.

பம்பாய் தாராவி 2-10-45-ல் திராவிட நாடு பகுத்தறிவு நிலையம்.

மேட்டுமருதூர் ஷெடியூல்டு வகுப்பு பெடரேஷன் 1-10-45-ல் திறப்பு விழாவில்!

சென்னை மெமோரியல் ஹாலில் 4-9-45-ல் மாபெருங்கூட்டம். பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் அனுதாபச் செய்தி அனுப்பியிருந்தார்கள்.

சென்னை பெரம்பூரில் 7-10-45-ல் தோழர் சத்தியவாணி முத்து தலைமையில் தோழர் சீன் பழகன் முதலியோர் பேசினர்.

வாஞகாபுரம் 21-9-45-ல் தேதி நெல்லை ஜில்லா தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் தொண்டர் படை.

திருவாரூர் திராவிடர் கழகத்தில் 11-10-45-ல் தோழர் சிங்கல் நாகப்பன் தலைமையில் நடந்த கூட்டம்.


தமிழர் சாப்பாட்டு விடுதி
(இந்தியா முழுவதற்கும் உரிமையாளர்)
பதிவு (Register) செய்தது. 6-7-45
,, No. 3024
Prop:- K. A. சண்முகம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு பிரார்த்தித்து கடிதம் எழுதி இருக்கும் தோழர்கள் 25பேர்கள் அவர்கள் பெயர்களாவன். நடராஜய்யர், ராமசாமி அய்யங்கார், நடேசய்யர், கிருஷ்ணசாமி அய்யங்கார், கிருஷ்ணமூர்த்தி அய்யர், கிருஷ்ணசாமி அய்யங்கார், அனந்தராமன், சுந்தரராமன், கே. சீனிவாசன், எம். எஸ். கிருஷ்ணய்யர் இப்படியாக அய்யர், அய்யங்கார்களாகவே 25 பேர்களும்பார்ப்பனர்களாகவே இருக்கிறார்கள் என்றால் வேறு யாரும் விரும்பவில்லை என்று தானே அருத்தம். இது 31-10-45 சு-மி பத்திரிகையில் இருக்கிறது.

ஆச்சாரியார் குற்றம்

ராஜகோபாலாச்சாரியார் ஆகஸ்ட் போராட்டத்தில் கலராதவர், அதைக் காட்டிக் கொடுத்தவர், அதற்கு எதிராகப் பிரசாரம் செய்தவர் என்பதுடன், பாகிஸ்தானத்துக்கு ஆதரவளித்தவர் என்பது அவர் மீது, காமராஜர் கூட்டத்தால் சாட்டப்படும் குற்றமாகும்.

ஆனால் காந்தியார் என்ன சொல்லுகிறார் என்றால் "ஆகஸ்ட் போராட்டம் காங்கரஸ்காரருடையதல்ல, அதற்கும் காங்கரசுக்கும் சம்மந்தமில்லை. ஆதலால் ஆச்சாரியார் ஆகஸ்ட் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்திருந்தாலும் அது காங்கரசுக்கு விரோதமாகாது" என்பது ஆகவும், ஆச்சாரியார் "பாக்கிஸ்தானை ஆதரித்ததை நானும் ஒப்புக்கொண்டேன்" என்றும் "ராஜாஜியைக் குற்றம் சொல்வது அறியாமை" என்றும் எழுதிவிட்டார். இனி வேறு சார்ஜ்ஷீட்போடவேண்டியதாய் விட்டது.

## திருமணங்கள்

அருப்புக்கோட்டையில் 19-10-45ல் பிரபல மளிகை வியாபாரி தோழர் குருசாமி நாடார் புதல்வன் தோழர் கதிரேசனுக்கும் மதுரை தோழர் பழனிசாமி நாடார் புதல்வி தோழர் பத்மாவதிக்கும் சுயமரியாதைத்திருமணம் நடைபெற்றதின் நினைவாக குடி அரசுக்கு 1-ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

* * *

திருநெல்வேலி பாளையங்கோட்டை பாலகவி தோழர். ஆ. பிரமநாயகம் சென்னை ஜெயராம நாயுடு புதல்வி தோழர் தனலட்சுமியை சீர்திருத்த முறையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டதின் நினைவாக குடி அரசுக்கு ரூ. 1. நன்கொடை அளிக்கப்பட்டது.


* * *

பட்டுக்கோட்டையில் 19-10-45தேதி காலை 11மணி அளவில் தோழர்கள் ஆர். கந்தசாமி அவர்களுக்கும், பட்டம்மாள் அவர்களுக்கும் சீர்திருத்தத் திருமணம், சுயமரியாதை முறைப்படி தோழர் ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமணத்தை ஆதரித்து தோழர்களான தங்கவேல் பத்தர் கே. எஸ். சிவராமன், என். பி. காளியப்பன், எம். முகமது மீரா சாயபு முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.


வியாதியின் வித்து தீபாவளி பண்டிகை!

ஜெயராம்

### காயசுத்தி லேகியம்



உண்மையான மருந்து. சக்தி வாய்ந்த மருந்து. பல நூற்றுக்கணக்கான குடும்பங்களில் தினம் உபயோகிக்கப்படுவது. உங்கள் வீட்டில் இருக்கிறதா? இல்லாவிடில் உடனே எழுதுங்கள்.

குடல்; இரைப்பை சம்மந்தமாய் ஏற்படக்கூடிய, வாந்தி, மயக்கம், தலைவலி, தொண்டைப்புண், நெஞ்சுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்புசம், வயிற்றுவலி, இடுப்புவலி, குடல்வாதம், கைகால் வலி, மூல நோய் முதலியவைகளை அகற்றி பசியைக் கொடுக்கும் உயிர்த்தோழன். உபயோகிக்கும் முறை மருந்துடன்.

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0. தபால்கூலி தனி.


ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.



80-வருட அனுபவம்
1872ஆ முதல் ஆங்கில மருந்து முறையும் இணைப்பு

## குரு மருந்துகள்

பர்மா, சிலோன், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளிலும், இந்திய வட மாகாணங்களிலும் சிறப்புற்றவை.



(CHILDREN'S HEALTH SET)

### குழந்தைகள் பாதுகாப்புக்கு

1-செட் 7-மருந்துகள்

1. குரு கோரோஜனை மாத்திரை 0-12-0
2. குரு கஸ்தூரி மாத்திரை 0-12-0
3. குரு பாலர் வயிற்றோட்ட மருந்து 0-14-0
4. குரு வேப்பெண்ணை தைலம் 1-4-0
5. குரு K. சொட்டு மருந்து (சக்குவானுக்கு) 2-0-0
6. குருஜிமாகளிம்பு(கரப்பானுக்கு) 1-0-0
7. குரு பாலர் டானிக் 2-0-0

(வி. பி. பி. பிரத்தியேகம்)

விபரங்களுக்கு:—

டாக்டர்
எ. மதுரம் சன்ஸ்,
குரு மருந்து சாலை..........
திருச்சினாப்பள்ளி (S. I.)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளையன் கி கண்ணுராமானுசம் தங்கவேல் நா வேணுகோபால் இ மாரிமுத்து ஜி திருஞானம் சு ராமச்சந்திரன் கி வேணுகோபாலன் கோ வாமனராஜ் வெ ரெங்கநாதன் முருகையன் கோ நாடிமுத்து வரதராஜலு மாணிக்கம் பிள்ளை கே எஸ் சிவாராமன் சி சாரங்கபாணி ரே எம் கோவிந்தசாமி ப அருளானந்தம் பி சுப்ரமணியன் பி நாராயணசாமி S துரைராசு ஜி ராதாகிருஷ்ணன் இராமச்சந்திரன் சேதுராமன் நா ரெ ராசகோபால் கே முத்து வி நடேச பிள்ளை.

வண்டமிழ்ப்பாளையம்

எம் அய்யன் பி அருணாசலம் பி வி நாதன் மு குமாரசாமி S சுப்ரமணியன் எம் முத்தையன் டி வைத்திலிங்கம் S டி வேலு S எய் நடராசன்.

திருவத்திபுரம்

மா நா இராசமாணிக்கம் மாவண்ணா தேவராசன் ரத்தினவேலு எம் அம்பலத்தாடி எ குப்புசாமி கா கோவிந்தன் மா ராஜ் நாகரெத்தினம் பி சாமிநாதன் எம் பச்சையப்பன் கே பரமசிவம் பி டி ஜனார்த்தனம் எம் பி கிருஷ்ணன் ராஜா குட்டியப்பன்.

நடராசபுரம்

பே சுப்ரமணியம் கோ கணேசன் ச தெண்டாயுதபாணி அ ஆறுமுகம் ம பழனிசாமி து கந்தசாமி மா ராமமூர்த்தி போ மாணிக்கம் க தங்கவேல் பே கோவிந்தன் ச நடராசன் அ பூங்காவனம் ச காசியம்மாள் லெ பாப்பாக அயிலம்மாள் ப ரெஜினா.

திட்டகுடி

ச இராமலிங்கம் எம் கிருஷ்ணசாமி பெ ஆறுமுகம் வை முக்களத்தாள் ஆர் துரைசாமி ரா கோவிந்தன் ஆர் தெய்வம் கே பாலு கே பக்கிரிசாமி ரா பிச்சகுட்டி த ரெகுபதி எம் துரைசாமி ரா சண்முகம் ரா ரெங்கசாமி ஆர் லோகநாதன் கு கருப்பையன் தருமலிங்கம் பி சுப்ரமணியம் பி எம் வைத்யநாதன் S செங்கமலம் வி முருகன் ராசமாணிக்கம் ரா பூலோகம் மு சுப்புராயன் நா பொன்னுசாமி ஆர் வைத்தினாதன் திரு சுப்பராமன் கு ஆள்வார் கருப்பம்மாளாச்டுயார் கே கோவிந்தசாமி சந்திரகாசன் வையாபுரி துரைக்கண்ணு சுப்புராயன் பெ நாராயணன் ஆ ஆறுமுகம் கே பெரியசாமி பெரியசாமி ராம்சாமி ஆ அம்பாயிரம் ஆ முருக முதலியார் வி ஆறுமுகம் ஆ முத்து டி வி கே கோவிந்தசாமி முத்துசாமி ம ப பழனியாண்டி எம் ராமசாமி மு முத்துக்குமரன் பெ சீத்தாராமன் டி எஸ் சஞ்சீவிய்யன் டி எஸ் சண்முகம் எஸ் சி சாரங்கபாணி சி கவியன் வி கிருஷ்ணமூர்த்தி ச மொ தங்கவேல் நிதி அழகன் சின்னத்தம்பி வே கந்தன் ஆ பச்சையான் சோமசுந்தரன் முனிசாமி கே அன்பழகன் அ சின்னசாமி பி பழனிக்கவுண்டர் ஆர் பி ரங்கம் ராமுடு மு லட்சுமணன் ஆர் நாராயணன் ச-பெரியசாமி ரா பூர்ணன் ஆர் பிச்சமுத்து வ கிருஷ்ணன் மா முத்தழகன் பி கலியபெருமாள் பி லட்சுமணன் வைத்தி வேலன் கருப்பன்.

சேரமாதேவி

கே எஸ் ஜே தாசன் எஸ் எம் எஸ் சுப்பையா என் தவமணி எஸ். ஆறுமுகம் எம் ராஜரத்தினம் எ சுப்பையா பி. சிதம்பரம் கலியாணிசுந்தரம் சே சாமி ராசேந்திரன் கா முத்துகுமார் வே சாமி எம் செல்லையா எ கோபாலன் எஸ் செல்லக்கனி பி எம் சுப்பையா வி எம் வேலாயுதம் எஸ் சண்முகவேல் கே ராஜம்மாள் ஜே தாயம்மாள்.

கோபிசெட்டிபாளையம்

ஜி வி வெங்கட்ராமன் ஜி எ சிவராமன் எ எ வெங்கடாசலம் எஸ் எம் சண்முகநாதன் என் நாராயணசாமி N K மாணிக்கம் ஜி பி மூர்த்தி ஜி பி ராமசாமி ஜி பி சுப்ரமண்யம் ஜி கே மாரிமுத்து ஜி எ ஆறுமுகம் ஜி வி வெங்கடாசலம் ஜி கே வாசுதேவன் ஜி பி கந்தசாமி கே என் நடராசன் என் கே ராமசாமி ஜி பி வி பதி என் சங்கரலிங்கம் பொன்னுசேதுராமன் சொ திருவேங்கடசாமி எ சி ராமன் ஜி ஆர் ராமசாமி ஜி என் ராசு டி நஞ்சுண்டையா முருகன் டி என் மாரியம்மாள் கணபதி வி மாறணன் டி எஸ் வெங்கடாசலம் ஜி. எ வெங்கடாசலம்.

தூத்துக்குடி

எ தாசன் டி பாண்டியன் எஸ் நவீன்ன் நல்லதுரை கே எஸ் செங்குட்டன் எம் பால்பாண்டி வ பெரியசாமி சாலமன்ராசையா சு செல்லச் சிவலிங்கம் எஸ் தர்மலிங்கம் எ பிச்சமுத்து எ வெள்ளக்கண்ணு பெ மாடசாமி எ அருள் டேவிட் கே எல் வேல் ம ரத்தினராஜ் அழகுவேல் வெ ஞானக்கண் எ சுந்தரராஜ் டி பிச்சைமணி எ சாமுவேல் ஆர் தேவதாஸ் திரவியம் முத்துசாமி ராசப்பர் சண்முகக் கனி பொன்னுசாமி ஜீவானந்தம் பார்வதி டி ஞானம் வி சின்னத்தங்கம் பூரணம் பாக்கியத்தாய் பத்திரகாளி திராவிடமணி தெய்வானை காசிலிங்கம் மாடத்தியம்மாள் வள்ளியம்மாள் சாரதா.

ஈரோடு

சுப்பையன் கி செல்வன் கு கி வ வாசுதேவன் ப சுப்ரமணியன் எஸ் நீலமேகம் ப கணபதி அ ரங்கராஜி குப்பு சுப்ரமணியன் எஸ் எஸ் ராமச்சந்திரன் ரா சுந்தரராஜ் எஸ் சந்திரசேகரன் து நடராசன் ஆர் கோவிந்தராசன் எஸ் சி காளியண்ணன் ரா சின்னசாமி அ கோவிந்தராசன் கே சுந்தராாசன் எஸ் அப்பாவு எம் நாராயணசாமி கிருஷ்ணன் நல்லசாமி அ சீனிவாசன் சௌந்தராசன் என் சுந்தரராசன் சி முத்துசாமி.

சுத்துகுழி

வீ வைத்திலிங்கன் கா நடேசன் ரெ செல்லப்பா ந அரிய புத்திரன் க அருணாசலம் ந தாண்டவராயன் ச கந்தசாமி கா ராஜாம்மாள் ஆர் வெங்கடாசலு ரெ வேலாயுதம் ர துரைசாமி பழனியம்மாள் வெ கிருஷ்ணமூர்த்தி கி தனலட்சுமியம்மாள் என் சொக்கலிங்கம் எஸ். அருந்ததி அம்மாள் சு நெடுமாறன் க கண்ணுசாமி பி ராமநாதன் கே மாணிக்கம் கே முத்துக்குமரன் கே குப்புசாமி எம் சச்சிதானந்தா என் பொன்னம்பலம் கே சீனிவாசன் கெ ஜெகநாதன் எஸ். சிதம்பரநாதன் சி அம்மாக்கண்ணு அம்மாள் நன்னப்பன் கே நமசிவாயம் கே சிதம்பரம் சி அஞ்சலை சு ஆறுமுகம் ஆர் கணேசன் கே கணேசன் ஆர் முத்தையன் கே ராசாம்பாள் கே காத்தவராயன் கே சடகோபன் ஆர் சக்கரபாணி பி பூராசாமி ஆர் முருகேசன் கே பாலசுப்ரமணியன் வை. கந்தசாமி.

திருவையாறு

என் தங்கவேலு டி வி கிருஷ்ணமூர்த்தி டி என். சிங்காரவேலன் டி எம் நடராசன் ஆர் வீராச்சாமி எஸ் சர்க்கரைப்பாண்டியன் கே தங்கசாமி எஸ் சோமசுந்தரம் பி தட்சணாமூர்த்தி எஸ் சிவப்பிரகாசம் எம் சாமிநாதன் டி ஆறுமுகம் இரா தனராசன் எஸ் புட்பவேல் கே துரைராசன் எஸ் சண்முகசுந்தரம் எஸ் ராமலிங்கம் ஆர் ராமதாஸ் எஸ் மணி ஜி வரப்பிரசாதம் எஸ் நாராயணன் ஆர்

ரோஜா முத்தையா

கோதண்டபாணி, டி கே பரமசிவம் டி ஆர் கோவிந்தசாமி கே தியாகராசன் டி நாராயணசாமி டி தனுக்கோடி வி கே முத்தையா எம் ராமச்சந்திரன் எம் முருகேசன் எம் பரமசிவம் ம துரைராசன் கே குப்புசாமி கே தங்கராசன் டி வி பூமாலை டி கருப்பையன் எஸ் குருசாமி எஸ் பழனிச்சாமி ஏ சச்சிதானந்தம் கே முருகையன் பி திருஞானசம்பந்தம் கே ரத்தினவேலு ஆ இராசமாணிக்கம் கே எஸ் வி மணி என் கந்தசாமி டி பிச்சய்யா ஐயாசாமி இளங்கோவன் சுப்பிரமணியன் சுயம்பிரகாசம் எஸ் தனசீலன் வி நீலமேகம் க பூவலிங்கம் வே பேச்சிமுத்து கே சண்முகம் கே கோபால் பி மணிவேல் எஸ் அம்மாசி சந்தனம் எம் அண்ணாமலை ரெ மணிவேலன் த ஜெகநாதன் க மணிமாறன் ஐராதா ப அய்யாசாமி அ மாரிமுத்து ம திண்டன் ச பிச்சை வ பேச்சிமுத்து மு அண்ணாவு மா கருப்பையன் க கோபால் சா பூவலிங்கம் ச அமுசி மா வடிவேல் கா வீரச்சாமி க பூவலிங்கம் த அய்யர் ச பூவலிங்கம் சீத்தாராமன் மாரிமுத்து அம்மணி அம்மையார் எம் நடராசன் வி சிங்காரராசு வா இராசமாணிக்கம் இராசாம்பாள் முழுமதி தருமாம்பாள் தங்கம்மாள்.

விருதுநகர்

ரா தர்மப் பெருமாள் சு நாராயணசாமி மா சரவணன் ல கருப்பையா சி ஜோசப் பொ காசிராசன் நா ராஜசேகரன் க ரத்தினம் பெ சு மாரியப்பன் பா சௌந்திரபாண்டியன் மா நடராசன் ச சுப்பிரமணியம் வெ ரா சுப்பிரமணியம் ப மாணிக்கம் சுப்பிரமணியன் லட்சுமணன் ப அருணாசலம் நீ ராமசாமி வீ நாகசுந்தரம் வெ ஆறுமுகம் செ இராமசாமி.

கடம்பூர்

ப கிருஷ்ணமூர்த்தி ப தில்லை சு அருணாசலம் எம் பேச்சியப்பன் பி சின்னதாய் என் சீனியப்பன் ஏ எம் கே செல்லையா [illegible] ஏ எம் கே எஸ் குருவம்மாள் ஏ எஸ் எம் அருணாசல நாடார் சீ சங்கரலிங்க நாடார் பொ பச்சையா வே தங்கம் க முத்தையா ப சின்னசாமி ம நாராயணன்.

கரூர்

எம் கே கரிகாலன் எம் நக்கீரர் கே ரங்கசாமி திராவிடமுத்து எம் கே அமிர்தலிங்கம் கே ஆறுமுகன் எஸ் சின்னச்சாமி கே பெருமாள் ஆர் சுப்பிரமணியம் கே கந்தசாமி பி முருகேசன் எம் கோவிந்தன் ராமசாமி கே குப்புசாமி கே அயில் நாயுடு கே மருதமுத்து கே நடராசன் வி கே புலிகேசி டி கே செங்கோடன் சேதுபதி எம் கொழுந்தவேல் பி கே அய்யா கே ராமசாமி டி கே பழனிசாமி பழனியப்பன் சி குருநாதமுதலியார் முனியன் கே ஜெயராம்முத்து என் ஆர் ராமசாமி கே எஸ் பழனியப்பன் ஜி ப குட்டியப்ப முதலியார் டி தமிழரசு சாந்தாமணி அம்மாள் சடையப்பன் ஆர் பி சாமி மு குழந்தைசாமி டி கே மாரிமுத்து எம் பி தனபாக்கியம் குப்புசாமி க சாமியப்பன் பி அன்புஅரசன் எஸ் சந்தானம் எஸ் ஜேசுதாஸ் ரெத்தினம் கே என் காமாட்சி அம்மாள் எம் மருதமுத்து கே பழனியப்பன் ஆர் கிருஷ்ணன் எஸ் வையாபுரி ஏ வையாபுரி பி மாணிக்கம் கே என் பழனிசாமி எஸ் ராமசாமி ஆர் பெருமாள் வி அண்ணாமலை பி பன்னீர் செல்வம் கோவிந்தராசு ஜீராசம்மாள் முத்துசாமி மாணிக்கம் திருஞானம் கே டி சண்முகம் ஆறுமுகம் பரமசிவம் சோமசுந்தரம் மலையப்பன் கருப்பண்ணன் நடேசன் பொன்னுசாமி மு கணபதிபிள்ளை மீனாட்சி சண்முகம் சரசு சண்முகம் சோ மாரி அம்மாள் என் ரங்கராசு என் வடமலை என் பெரியசாமி எஸ் முத்துசாமி ஆறுமுகம் கை வீரமலைமுத்து வி சிவகிரி பி சிதம்பரம் எம் கே கார்வல் பழனிப்பன் டி எம் எஸ் மணி பெரியசாமி பரமசிவம் முத்துசாமி ச நல்லகுருந்து சேர்வை வி பி ரத்தனப்பா கே வீரபாண்டியன் கணேசன் கே அய்யாவு முதலியார் கே பழனியப்பன் வி பழனியாண்டி ஆர் கிருஷ்ணன் ஏ கிருஷ்ணன் பி செல்லப்பன் திரு நாராயணசாமி கே வீரமணி வீரமணி எஸ் எம் தமிழ்மொழி எஸ் விசர்தலிங்கம் ஆனந்தன் எஸ் ஆர் சுவாமிய்யன் ஆர் சுப்ரமணியன் எஸ் சுப்ரமணியன் எம் மாரியப்பன் என் பழனியப்பன் பன்னீர்செல்வம் ஆர் ராமசாமி கே பழனியம்மாள் வி அங்கம்மாள் ச இராவணன் ஏ பொன்னுசாமி கே சேது கே ராமசாமி ஆர் ஆறுமுகம் கே வேலு எம் பரமசிவம் எஸ் மலையன் எஸ் ராசலிங்கம் வி ராசாமணி பி முத்து சுப்பராயன் கே கந்தசாமி பாலசுப்ரமணியம் சி சத்யமூர்த்தி பி ராஜகிருஷ்ணன் வி கிருஷ்ணன் கே வேவப்பா வி எம் ரத்தினம் வி எம் பழனியப்பா கே பி ராமசாமி வி எஸ் கந்தசாமி பி நடேசன் சி இமூர்த்தி எஸ் பொன்னுசாமி பி முத்துசாமி ஆர் பழனிச்சாமி எஸ் எம் ராமசாமி கிருஷ்ணசாமி ஆர் சுவாமிநாதன் எஸ் சுப்பராயன் எம் எஸ் ராமசாமி கே நடேசன் எஸ் அர்ச்சுனன் டி பாலகுரு வெங்கடசாமி எஸ் பெருமாள் நாராயணன் ஏ சிவராமகிருஷ்ணன் பி ராமசாமி ஆர் சுப்ரமணியம் ஆர் ஆதிமூலம் ஆர் ரெங்கநாதன் ஆர் சீரங்கக்கோனார் அ மாரியப்பா டி நடராசன் ஆர் பழனியப்பா எம் ரத்தினசபாபதி ஆர் ராமலிங்கம் டி கிருஷ்ணன் பி பி மோகன்தாஸ் ஜி கன்னையன் கே வேதமுத்து கே சுப்பராயலு.

படப்பை

கே எம் கூத்தய்யா அ சுப்பையன் சம்பத்து சந்தோஷம் மாணிக்கம் பி வீரய்யா.

மற்ற ஊர்கள்

ஆ சாமிய்யா (காண்டியன் காடு) சா பெரியதம்பி (சூரியா தோட்டம்) ப கோவிந்தராசு (வடுவங்கொத்தை) பி வீராச்சாமி (மதுக்கூர்) சு கண்ணையன் (பொன்மலை) மா இராமய்யா (அரந்தாங்கி) எஸ் கணபதி (வாக்கிரயனூர்) ச தனபாக்கியம் (தொட்டியம் மருதை, பத்மாவதி (திருச்சினாப்பள்ளி) (தொடரும்)

# திராவிடக் கழகங்கள்

பொன்மலை திராவிட வாலிபர் கழக தேர்தல் கூட்டம் 18-9-45 மாலை 9-மணிக்கு தோழர் எஸ். நடராசன் தலைமையில் கூடி புத்தாண்டு நிர்வாகிகளைத் தெரிந்தெடுத்தது. அப்போது பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள், தோழர்கள் ஜி. பராங்குசம் தலைவர், ஜி. பரமசிவம் துணைத்தலைவர், வி.எஸ். பெருமாள் செயலாளர், ஜி. என். முத்து கிருஷ்ணன் துணைச் செயலாளர். ஜி. பத்மநாபன் பொருளாளர், வெங்கடாசலம், வாசகசாலை செயலாளர்,

5-வது ஆண்டுவிழாவுக்கு பொருளுதவி செய்தும், வந்திருந்தும், ஒத்துழைத்த தோழர்கள் யாவருக்கும், பெரியார் தொண்டர் படைக்கும் செயலாளர் நன்றி தெரிவிக்கிறார்.

காரைக்குடியில் 17—9—45 மாலை 7-மணிக்கு மகர்நோன்புப் பொட்டலில் தோழர் கே. வி. அழகர்சாமி தலைமையில் பெரியார் பிறந்த நாள்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தோழர் ஜனார்த்தனம் எம். ஏ., அவர்களின் உணர்ச்சிமிக்க சொற்பொழிவுக்குப் பின் தலைவர் விளக்கமாக முடிவுரை கூறினார்.

பெரியகுளம் திராவிடர் கழகம், மணி மன்றம் ஆகியவற்றின் சார்பில் திருச்சி மாநாடுகட்கு 18 பிரதிநிதிகள் வருவதாகத் தெரிந்தெடுக்கப்பட்டது.

தஞ்சை நகர திராவிடர் கழகம் தோழர் ஏ. கே. ஆர். சாமி தலைமையில் 19-9-45-ல் கூடி திருச்சி மாநாடுகளை முழுமனதுடன் வரவேற்பதாயும், அவைகட்குப் பெரியாரே தலைமைதாங்க வேண்டுமெனவும் தீர்மானித்து 13 பிரதிநிதிகளையும் தெரிந்தெடுத்தது.

முத்துப்பேட்டையில் தோழர் கோவிந்தசாமி தலைமையில் 13—9—45 மாலை ஒரு திராவிடர் கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சாமிநாதன், மு. கருணாநிதி, அரங்கண்ணல், புலவர் க. ச. மணியம் ஆகியோர் சொற்பெருக்காற்றினர். செயலாளர் தோழர் சாமிநாதன் நன்றிகூறினார்.

பட்டுக்கோட்டை திராவிடர் கழகம், சுயமரியாதைச் சங்கம் ஆதரவில் 15-9-45 மாலை தோழர் சி. என். விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் புலவர் க. ச. மணியம் திருச்சி மாநாட்டின் திராவிடர் கட்சியும் பற்றிப் பேசினார்.

பட்டுக்கோட்டை திராவிட மாணவர் கழகத்தின் ஆதரவில் 5-10-45-ல் ஒரு மாபெருங்கூட்டம் தோழர் என். வெங்கடேசன் தலைமையில் நிகழ்வுற்றது. தோழர்களான புரட்சிக்கவி பாரதிதாசன், என். பி. ரெங்கசாமி ஆகியோர் விரிவுரையாற்றினர். கவிஞருக்கு கழக சார்பில் வரவேற்பிதழ் அளிக்கப்பட்டது.

பொன்மலை திராவிட மாணவர் கழகச் சார்பில் 16-9-45 மாலை தோழர் டி. கே. சீனிவாசன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் நட்பினன் புலவர் குழந்தையா, ஜனார்த்தனம், கே. வி. அழகர்சாமி, ஆறுமுகம், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் விரிவாகச் சொற்பொழிவு செய்த பின் செயலாளர் தோழர் சங்கரநாராயணன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

திருச்சி திராவிட இளைஞர் கழகச்சார்பில் தோழர் தி. பொ. வேதாசலம் தலைமையில் 16-9-45 மாலை வீதிவிடங்கம் மந்தையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான கிராம மக்கள் வந்திருந்தனர். தோழர்கள் அடைக்கலசாமி, காபிரியேல் ஆகியோர் சொற்பொழிவு செய்தனர்.

குளத்தூர் திராவிட கழகச் சார்பில் தோழர் ஆர். எப். சாமி தலைமையில் 16-9-45-ந் தேதி இரவு பெரியார் 67-ம் ஆண்டு பிறப்பு விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் எம். ஆர். சபாபதி, கே. டி. பால், எம். பெத்தாசன் ஆகியோர் பெரியாரின் சேவை பற்றிப் பேசினர். சிறுவர்கட்கு மிட்டாய் வழங்கப்பட்டது.

கள்ளிகுளம் திராவிடர் கழகப் பொதுக் கூட்டம் 16-9-45 இரவு தோழர் இ. துரைசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். வி. டேவிஸ், பி. எம். ஜேசிங், அ. சேக் முகமது, எம். சங்கரபாண்டன் ஆகியோர் பேசிய பின் செயலாளர் தோழர் ஜேசிங் நன்றி கூறினார்.

நாகை திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் தலைவர் ஆர். வி. கோபால் தலைமையில் கூடிற்று. வரவு செலவு பார்க்கப்பட்டு செயலாளர் மலைக்கொழுந்து ராஜினாமாவை மறுகூட்டத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

நன்னிமங்கலம் திராவிட வாலிபர் கழகத்தின் சார்பாக 20-8-45-ல் தோழர் சத்தியநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் வேலு, கிருஷ்ணமூர்த்தி, முனியன், பொன்னுசாமி ஆகியோர் பேசினர். 23-9-45-ல் வே. பெரியசாமி தலைமையில் ஒரு கூட்டம் நிகழ்வுற்று தோழர்கள் ராசகோபால், நாகராசன் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

வாழ்குடை திராவிடர் கழக சார்பில் 21-9-45-ல் தோழர் டி. கண்ணன் பி.ஏ., தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் என். சுப்ரமணியம் சொற்பெருக்காற்றினார்.

வாழ்குடை திராவிடர் கழகச் சார்பில் 25-9-45 அன்று தோழர் கனகசபை முதலியார் தலைமையில் பெரியார் பிறந்ததின விழா கொண்டாடப்பட்டு தோழர் வி. என். கிருஷ்ணசாமி சொற்பொழிவாற்றினார்.

சென்னை தண்டையார்பேட்டை திராவிடர் கழகச் சார்பில் 16-9-45-ல் தோழர் குப்புசாமி தலைமையில் பெரியார் 67-வது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. தோழர்களான எஸ். ஆர். சான்டோ, கஜேந்திரன் பி. ஏ., அன்பழகன் பி. ஏ., என். ஜீவரத்தினம், என். வி. நடராஜன் மற்றும் பலர் விரிவுரை நிகழ்த்தினர்.

திருப்பத்தூர் திராவிடர் கழக நிர்வாக கமிட்டிக் கூட்டம் 23-9-45-ல் தோழர் வி. எஸ். வீரபத்திரன் தலைமையில் கூடி பழயகோட்டைப் பட்டக்காரர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டது.

விருத்தாசலம் திராவிடர் கழகத்தின் தேர்தல் 23-9-45-ல் நடைபெற்று, தோழர் ஏ. சி. பொன்னரசனுக்குப் பதிலாக தோழர் முனுசாமியைத் தலைவராகவும், செயலாளராக தோழர் டி. பத்மநாபனையும்; துணைச்செயலாளராக தோழர் டி. பழனிக்கண்ணையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி திராவிட மாணவர் கழகப் பொதுக் கூட்டம் 4-10-45 மாலை சேலம் தோழர் ஜி. கெச். கோதண்டராம் தலைமையில் நிகழ்ந்தது. கழகத்தின் தலைவராக எம். இராமச்சந்திரன், உபதலைவராக என். ஆர். ஜெகநாதன், காரியதரிசியாக ஆர். எம். ராதாகிருஷ்ணன், எம். சௌந்தரராஜன், பொருளாளராக எஸ். எஸ். கோபிசந்தர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு மற்றும் ஆறு நிர்வாக உறுப்பினர்களும் அமைக்கப்பட்டனர்.

சேலம் நகர அம்மாபேட்டை பனகால் திராவிடர் கழகக் கட்டிடத்தில் பெரியார் பகுத்தறிவுப் படிப்பகமும் நூல் நிலையமும் திறக்கப்பட்டு தோழர்களான எ. சுப்பிரமணியம் தலைவராகவும், கே. ராமசாமி துணைத்தலைவராகவும், ஏ. ஆர். சங்கரன் காரியதரிசியாகவும், கே. பி.

ரங்கசாமி துணைக் காரியதரிசியாகவும், எஸ். லக்ஷ்மையா பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருச்செங்கோட்டில் திராவிடர் கழக ஆதரவில் 8-10-45 ல் தோழர் பொன்னு சாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் அப்துல் கபார், மு. விசுவநாத முதலியார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஆலங்குடி ஆதிதிராவிட சேரியில் தோழர் ப. வெர்பாசன் தலைமையில் தோழர்கள் கே. எஸ். கோவிந்தராசன், ஜி. சிதம்பரம், ஆர். எஸ். முத்து, வை. நன்மாறன், எம். கோவிந்தராசலு ஆகியோர் சொற்பொழிவாற்றியதுடன் திராவிடர் கழகமும் தோற்றுவிக்கப்பட்டது.

வளையாம்பட்டு திராவிடர் கழக தேர்தல் 3-10-45-ல் நடைபெற்றது. தலைவர் ஏ. நல்லசாமி, துணைத்தலைவர் என். ஏ. பிரகாசம், செயலாளர் எம். ஏ. சாமி, துணைச் செயலாளர் எஸ். மாரிமுத்து, பொருளாளர் டி. தங்கவேல் மற்றும் 12 கமிட்டி உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கபிட்டூர் கொத்தமங்கலம் திராவிடர் கழக சார்பில் தோழர் செ. ஆண்டி தலைமையில் பெரியார் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எஸ். மணி, பி. நாகராசன் பேசினார்கள்.

திண்டிவனம் திராவிட இளைஞர் கழக அமைப்புக் கூட்டம் 11-10-45-ல் தோழர் கோ. ஆதிகேசவன் தலைமையில் நடைபெற்று கீழ்க்கண்ட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது. தோழர்கள் குமாரசாமி தலைவர், பாண்டுரங்கன் துணைத்தலைவர், ஆதிகேசவன், நடராசன் செயலாளர்கள், அருகதாஸ் பொருட்காப்பாளர்.

திருப்பத்தூர் திராவிட மாணவர் கழகத்தில் திராவிட இயக்கத் தீர்மானங்கள் ஆதரிக்கப்பட்டு பலர் பேசியதோடு பழயகோட்டைப் பட்டக்காரர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

திருவாரூர் திராவிடர் கழகத்தின் சார்பில் அக்டோபர் 11, 13, 14 தேதிகளில் முறையே தோழர்கள் சிக்கல் நாகப்பன், வி. ஜி. ரெங்கராசு, தலைமைகளில் நடந்த விசயபுரம், திருவாரூர், புலிவலம் கூட்டங்களில் தோழர் கே. வி. அழகிரிசாமி பேசினார். தோழர்களான எம். ஏ. ஆ[illegible]கவுண்டார், பழயகோட்டைப் பட்டக்காரர், ஆர். சீனிவாசன் ஆகியோர் [illegible]

மாணத்திற்காக அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேறின.

கோவை திராவிடமாணவர் கழக சார்பில் 17-9-45 மாலை டவுன் ஹால் மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் நெடுஞ்செழியன் எஸ். ஆர். சுப்பிரமணியம், பி. பாலசுந்தரம் மற்றும் பலர் பேசினர்.

பொன்மலை திராவிட வாலிபர் கழக தோட்டத்தில் 15-9-45ல் துரைசாமி நாடார் இயற்கையெய்திய சடங்கு தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் நடைபெற்று தோழர்கள் ஆறுமுகம்பிள்ளை, சம்பத், சனார்த்தனம், குழந்தையா, டி. கே. சீனிவாசன் ஆகியோர் பேசினர். குடி அரசுக்கு 2 ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

திருவண்ணாமலை திராவிடர் கழகத்தார் 14-10-45ல் கூடிய கூட்டத்தில் வீரமுத்து என்ற போலிச்சாமியாரைப் பற்றி எதிர்ப்பிரசாரம் செய்ய தோழர் ஆ. க. பொன்னுசாமி தலைமையில் ஒரு கமிட்டி நிறுவியுள்ளனர்.

திலக்கோட்டை திராவிடர் கழகக் கூட்டம் தோழர் முத்திருளாண்டி தலைமையில் நடைபெற்று தோழர்கள் சூரியன்-தலைவராக, நாகரெத்தினம்-செயலாளராக, கோயில் பிள்ளை பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இராசபாளையம் நகர திராவிடர் கழகக் கூட்டம் 14-10-45-ல் நடைபெற்று தோழர் சேதுராமன் தலைமையில் தோழர் துரைராசனால் கணக்கு சரி பார்க்கப்பட்டது.

நாசரேத் திராவிடர் கழகக்கூட்டம் தோழர் ஜெயபால் தலைமையில் நடைபெற்று கழக வாசகசாலையை ஞான துரைசாமி நாடார் கட்டிடத்திற்கு மாற்றுவதென தீர்மானிக்கப்பட்டது.

வேடிச்சிபாளையம் திராவிடர் கழகம் 9-10-45ல் நிறுவப்பெற்று தோழர்கள் சி. சண்முகம் தலைவராகவும், பெரியசாமி, மாரமணி, சிங்காரம் ஆகியோர் காரியதரிசிகளாகவும், மருதநாயகம் உப தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். குடி அரசுக்கு 1ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

வாழ்குடையில் 12-10-45 வெள்ளியன்று தோழர் மன்னார் கவுண்டர் தலைமையில் நடந்த திராவிடக் கூட்டத்தில் தோழர் வி. எஸ். கிருட்டிணசாமி பேசினார்.

சேலம் கிருட்டிணகிரி வட்டம் நாகசம் பேட்டை திராவிட கழகச் சார்பில் தோ

## திராவிடத் தோழியரே!

(அன்னபூரணி அம்மை)

தோழியரே!

நான் திருச்சி மாநாட்டுக்குச் செல்வதற்கு முன் வைதீகத்தில் உழன்று, கிழமை தவறாது விரதங்களில் கருத்தைச் செலுத்தி ஒரு ஆஸ்தீக உருவாயிருந்தேன். திருச்சி தந்த தீவிரமான கொள்கைகளும், ராதா அவர்கள் நடத்திக்காட்டிய போர்வாள் நாடகமும் என்னை ஒரு உண்மைச் சுயமரியாதைக் காரியாக ஆக்கிவிட்டது.

என் கணவர் கூறிய அறிவுரைகளை அப்பொழுது அலட்சியம்செய்து பகுத்தறிவற்று வாழ்ந்தோமே என்று, இன்று வருந்துகிறேன். காதலர்களுக்குள் கருத்து வேற்றுமை யில்லாதிருந்தால் தான் வாழ்வு வளமுறும் என்பதை திருச்சி மாநாடு தெரிவித்துவிட்டது.

ஆகவே தோழியரே! இனிவரும் மாநாடுகளுக்குச் செல்லத் தவறாதீர்கள். ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் இடங் கொடுங்கள். அண்மையில்வரும் தீபாவளிப் பண்டிகையை கொண்டாடுவதில்லையென முடிவு செய்யுங்கள். ரம்ஸான் பண்டிகை முஸ்லிம்களுக்கென்று நாம் எப்படி வாளாயிருக்கிறோமோ அதுபோலவே தீபாவளி ஆரியப் பண்டிகையென்று வாளாயிருங்கள். திராவிடத்தின் உயர்வுக்கு வழிதேடுங்கள்!

## டாக்டர் பட்டாபிக்கு கேள்விகள்

நெல்லூர் தோழர் சி. எஸ். குப்தா அவர்கள் டாக்டர் பட்டாபிக்கு கீழ்க்கண்ட கேள்விகளை அனுப்பியுள்ளார். அதன் நகலை பெரியார் ஈ. வெ. இராமசாமி, மௌலானா ஆஜாத், பண்டித நேரு, தோழர் சாந்தியார், டி. பிரகாசம், டாக்டர் சி. இராசகோபாலாச்சாரியார், இராவ்பகதூர் என். சிவராஜ், டாக்டர் அம்பேத்கார் ஆகியோருக்கு அனுப்பியுள்ளார்.

### கேள்விகள்

வரும் தேர்தல்களில் காங்கரஸ் எல்லாத் தொகுதிகளுக்கும் ஹரிஜனங்களை நிற்கவைத்து காங்கரசிற்கு அவர்கள் மீதுள்ள அன்பைக் காட்டுமா? எல்லா நேரங்களிலும் சாதி இந்துக்களே பதவிக்கு ஆசைப்படுவதா? அரிஜனங்கள் அதை ஒரு முறையாவது அடையட்டும். சென்னை வழி காட்டட்டும்.

ழர் ராச சுப்பிரமணியம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் புலவர் தோழர் ராமச்சந்திரனார் "கலைப் புரட்சி" என்பது பற்றியும் தோழர் பாமசிவனார் "நாடும் மொழியும்" என்பது பற்றியும் பேசினார்கள்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.